உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் 9 | உருத்ரோத்காரிஹூ மார்கழி—தைமீ 1923-டிசம்பர்—1924-ஜனவரிமீ | இதழ் 9-10 |
| --- | --- | --- |


திருநேரிசை

கரும்பினு மினியான் றன்னைக் காய்கதிர்ச் சோதியானை
இருங்கட லமுதந்தன்னை யிறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவரேத்தும்
அரும்பொனை நினைந்தநெஞ்ச மழகிதா நினைந்தவாறே.

——

## வேதாந்த சித்தாந்த சமரசம்

(சித்தாந்தப் பிரகரம்)

"வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே."

1. ஒரே சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு ஒரேவித ஆலயத்தில் வழிபடும் நம்மவர்கள் இருவேறு வகுப்பினராய்க் காணப்படுகிறார்கள். அவ்வகுப்பாவன, வேதாந்த வகுப்பு சித்தாந்த வகுப்பு என்பனவாம். இவருள் வேதாந்த வகுப்பினரிற் சிலர், சித்தாந்தம் விவகாரிகதசைக்கே யுரியதென்று கூறி, அதனைத் தாழ்த்துகிறார்கள். சித்தாந்த வகுப்பினரிற் சிலர், ஏகான்மவாத, மாயாவாதங்களே, வேதாந்தமெனப் படுமென்றும், அது கேவலம் பூர்வபட்சமென்றுங் கூறி, யதனைத் தாழ்த்துகிறார்கள். இவ்வாறு ஒருவரையொருவர் தாழ்த்திக் கூறுதலோ டொழியாது, இவர்கள் வாதம், ஒரே காலத்தில் இவர்களுக்குப் பெரும்போரை விளைப்பதாயும் நேர்கிறது. இவ்விரு திறத்தாரும், உண்மை வேதாந்த மின்னது, உண்மைச் சித்தாந்த மின்னது என்பதை யுணராமையே யிவர்கள் வாதத்திற்குக் காரணமாகின்றது. போலி வேதாந்தத்தை உண்மை வேதாந்தமென்றும்,

அது சித்தாந்தத்தினேடு முரணுமென்றும் எண்ணுதலினுலேயும், அப்படியே போலிச் சித்தாந்தத்தை உண்மைச் சித்தாந்தமென்றும், அது வேதாந்தத்தினேடு முரணுமென்றும், எண்ணுதலினுலேயும் இவ்வாதம் நிகழ்கின்றது. இவ்விதம் வாதிக்கிறவர்கள் உண்மைச் சித்தாந்தத்தையும் தெரிந்து கொள்வரேல், இவ்வாதத்திற் கிடமில்லை. எனவே உண்மை வேதாந்தம் எது, உண்மைச் சித்தாந்தம் எது எனத் தெரிய வேண்டுவது மிக அவசியமே. இவற்றுள் உண்மை வேதாந்தத்தினை முதற்கண் ஆராய்ச்சி செய்வாம்.

2. உபநிடதங்கள் வேதாந்த மென்பதை எல்லா வகுப்பினரும் ஒப்புவார்கள். ஸ்மார்த்தர், சைவர், வைணவர், மாத்வர் முதலிய எல்லாரும் ஒப்புவார். இவ்வுபநிடதங்களை வியாசபகவான் சூத்திர ரூபமாகச் சுருக்கி யெழுதினுர். இது பிரம மீமாஞ்சை சூத்திரமென வும், வேதாந்த சூத்திரமெனவும் படும். இச்சூத்திரத்திற்கு நீலகண் டர், சங்கரர், இராமாநுஜர் முதலியோர் பாஷ்யங்களியற்றி யுள்ளார்கள். இவ்வொவ்வொரு பாஷ்யமும் வேதாந்த மென்னும் பெயரால் வழங்கப் படும். ஆனுல் ஸ்ரீ சங்கர பாஷ்யத்துக் குரியார், அஃதொன்றே உண்மை வேதாந்த மென்கிறுர். மற்றைப் பாஷ்யங்களுக் குரியாரும் தத்தம் பாஷ்யத்தை யப்படியே கூறுகிறுர்கள். அதனேடு நில்லாது, இவ்வொவ்வொரு பாஷ்யத்துக் குரியாரும் தத்தம் பாஷ்யத்தோடு சித்தாந்தம் முரணுவதுபற்றி வேதாந்த சித்தாந்தங்கள் ஒன்றோ டொன்று முரணுவனவாக எண்ணி வாதிக்கிறுர்கள். இவ்வெல்லாப் பாஷ்யங்களுமே உண்மை வேதாந்த மல்லாதிருக்கலாம். இவற்றிற் கெல்லா மூலமாகிய வியாச சூத்திரமுமே உண்மை வேதாந்த மல்லா திருக்கலாம். உபநிடதங்கட்கு, இச்சூத்திரத்தைப்போல சிவ சூத்திர மொன்றும் அதற்கு ஸ்ரீ சுப்பிரமணியர் வார்த்திகமு மிருப்பதாகத் தெரிகிறேம். இவ்வியாச சூத்திர பாஷ்யங்களியாவுமே, பசுக்களால் தத்தமறிவிற் பட்டவாறு இயற்றப்பட்டனவே யன்றிப் பிறிதல்ல. இவற்றை நோக்கப் பரம்பொருளினு லருளிச் செய்யப்பட்ட உபநிடதங் களே உண்மை வேதாந்தங்களா மென்பதில் யாதோர் தடையுமில்லை. அவற்றை யுண்மை வேதாந்த மென்பதில் எல்லார் சம்மதமுமுண்டு. அவற்றேடு சித்தாந்த முரணுமானுல் மாத்திரம் வேதாந்த சித்தாந் தங்கள் பேதமெனலா மன்றிப் பிறிதில்லை.

3. இனி உண்மைச் சித்தாந்த மின்னதென்பதை யாராய்வாம். சித்தாந்தமென்றுல் முடிந்த முடிபு என்பது பொருள். வேதாந்தங் களில் அநேக பூர்வபக்ஷங்களிருக்கின்றன. அவைகள், தூலாருந்ததி

முறையிற் கூறப்பட்டன. எளிதிற் பார்க்கவராத அருந்ததி நட்சத்திரத்தைப் பார்க்க விரும்பிய ஒருவனுக்கு, முதற்கண் அந்நட்சத்திரத்தின் பக்கலுள்ள ஒரு தூல நட்சத்திரத்தை யதுவேயெனக் காட்டி அதையவன் தெரிந்தபின்னர், உண்மை அருந்ததி இத்தூல நட்சத்திரமல்லவென்று கூறி இதனினு மிவ்வுண்மை யருந்ததிக்கு அதிகச் சமீபமாயுள்ள வேறுமோர் தூலநட்சத்திரத்தை உண்மை யருந்ததியெனக் காட்டி, அதனையுமல்லவென்று கழித்து அப்படியே உண்மை யருந்ததியைக் காட்டு முறைபோல, உபநிடதங்களும், உண்மைப் பரம்பொருளை விளக்குகின்றனவாம். அதாவது, அப்பரம்பொருளி னருட்குணங்களிலோர் ஏகதேசம் எளிதில் விளங்கப்பெற்ற பொருள் ஒன்றைப் பரம்பொருளென வேதாந்தங்கள் கூறும் உதாரணமாக பிருதிவியைக் கடவுளென ஓதும். அதனியல்பை யுணர்ந்தானுக்கு, உண்மைப் பரம்பொருள் அதுவல்லவென்று அதனைப் பூர்வபக்ஷமாக்கி, முன்னைய பொருளினும், பரம்பொருளின் குணாதிசயங்கள் அதிகம் விளங்கப்பெற்ற வேறுமோர் பொருளைப் பரம்பொருளெனக் கூறும். உதாரணமாக, அக்கினியே கடவுளென ஓதும். பின்னர் இதனையும் பூர்வபட்சமாக்கி வேறுமோர் பொருளைப் பரம்பொருளெனக் கூறும். இப்படியே ஒன்றைவிட்டு ஒன்றாய் வருணன், இந்திரன், பிரமன், விண்டு முதலியோர்களி லொவ்வொருவரைப் பரம்பொருளென ஓதி அவற்றை யெல்லாம் பூர்வபக்ஷமாக்கி, முடிவிற் சிவ பரம்பொருளே உண்மைப் பரம்பொருளென முடித்துக் கூறும். இதுவரை பரம்பொருளினியல்புளாகக் கூறப்பட்டன வெல்லாம் அதற்கும் வேறு வேறு பொருள்கட்கும் பொதுவாயுள்ள வியல்புகளாதலால் அவை யாவும் பரம்பொருளின் பொது வியல்புகளாம். இவ்வியல்புகளைக் கூறும் நூலும் பொது நூலெனப்படும். இதுவே வேத வேதாந்த நூல். இனிக் கூறப்படும் இயல்புகள் யாவும் சிவ பரம்பொருட்கே உரித்தாமாதலால், சிறப்பியல்பெனப்படும். இவ்வியல்புகளைக் கூறும் நூல், சிறப்பு நூலெனப்படும். இந்நூலே சிவாகம நூலாம். பரம்பொருளின் பொது சிறப்பியல்புகள் ஒரே நூலிற் கூறப்படில் மயக்கத்திற் கேதுவாமென்பதுபற்றி இவ்வியல்புகள் வேறு நூலாற் கூறப்பட்டுள்ளன. இந்நூலே வேதாந்த நூலில், பரவித்தை யென்று படிக்கப்பட்டுள்ள நூல். வேதத்திலுள்ள முடிந்த முடிவுப் பொருளாகிய சிவ பரம்பொருளி னியல்புகளை யுணர்த்துவதால், இந்நூல் சித்தாந்த நூலெனப் பட்டது. இச்சிவாகம நூலிற்குரியார் யாரும் இந்நூல் சித்தாந்தமென்பதை யொப்புவர். இந்நூலாலுணர்த்தப்படு மியல்புகளையும் பல

ரும் தத்தந் தவவலிக் கேற்பப் பலவாறுணர்ந்தனர். அவ்வாறுணர்ந்தார் ஆறு வகையினுளடங்குவார். இவரே பாடாணவாத சைவர், சிவாத்துவித சைவர் முதலிய அறுவகைச் சைவர். இவருள் ஒவ்வொருவரும், தாந்தா முணர்ந்துள்ளபடிக்கான சைவக் கொள்கைக்கு, வேதாந்தம் முரணுமெனக் கூறுவர். இவ்வறுவகைச் சைவர்களுமே சிவாகமங்களை யுள்ளபடி யுணராதாரா யிருக்கலாம். எனவே யிவருள் எவர் கொள்கையினோடும் வேதாந்த முரணுவதுபற்றி வேதாந்த சித்தாந்தங்கள் பேதமென்பது தவறும். இவரெல்லோராலும் ஏனையோராலும் சித்தாந்தமென ஒப்புக்கொள்ளப்படும் சிவாகமங்களோடு, முன்னர் உண்மை வேதாந்தமென விளக்கப்பட்ட உபநிடதங்கள் முரணினாலன்றி வேதாந்த சித்தாந்தங்கள் பேதமாகா. அபேதமென்றே கொள்ளல் வேண்டும்.

4. இனி, மேற்கூறிய உபநிடதங்களும் சிவாகமங்களும் முரணுவனவா வென்பதை ஒரு சிறிது ஆராய்ச்சி செய்வாம். ஜகத்துமித்தை யென்பது வேதவாக்கியம். இவ்வாக்கியத்திற்கு ஜகத்து கேவலந் தோற்றம்; உண்மையில் இல்லாத பொருள் எனப் போலி வேதாந்திகள் பொருள் கொண்டு, ஜகத்து உண்மைப் பொருள் என்னும் சிவாகம வாக்கியமும் இவ்வேத வாக்கியமும் முரணுமென்பர். ஆனால் உண்மை வேதாந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும், மேற்கூறிய வேத வாக்கியத்திற்கு ஜகத்து அநித்தியம், நீண்ட கால மிருப்பதுபோலத் தோன்றி, கணப்பொழுதில் அழிந்து போந்தகைமைத்து என்று பொருள் கொண்டு, அவ்வாறாயினும் அழிந்து போகும் வரை உள்ள பொருளாதலாலும் தூலவடிவு சூக்கும வடிவாய் மாறுதலே அழிவாதலாலும், அழிந்த பின்னும் அப்பொருள் சூக்குமத்திலுள்ள பொருளே யாதலாலும், சூன்னியமாதல் என்னும் அர்த்தத்தில், எப்பொருட்கும் அழிவு கிடையாதாதலாலும், ஜகத்தைச் சிவாகமத்தில், உள்ள பொருள் என்றதும் இவ்வேத வாக்கியத்திற்குப் பொருத்தமேயென உணர்வர். "எல்லாம் நின்னிடைத்தோன்றி நின்னிடை யொடுங்கும்" எனக்கூறியது போல வேதங்கள் ஜகத்தை முதல்வனிடத்துத் தோன்றுவதாகக் கூறும். சிவாகமங்கள் ஜகத்துக்கு மாயையிலுற்பத்திகூறும். இவ்விரண்டும் ஒன்றோடொன்று முரணுவதாகப் போலி வேதாந்திகளும் போலிச் சித்தாந்திகளுங் கூறுவர். தாமரையையுணர்த்தும் "பங்கஜம்" என்னுஞ் சொற்குச் சேற்றிலுண்டாகியது என்பது பொருள். பங்கஜம் கிழங்கிலுண்டாவதன்றி சேற்றிலுண்டாவதில்லை. சேற்றை யாதாரமாகப் பெற்ற கிழங்கிலுண்

டார்கும் 'தாமரையைச் சேற்றிலுண்டாவதாகக் கூறுவதுபோல் மூயை யிலுண்டாகிய ஜகத்தை அதனை யாதாரமாகப் பெற்ற முதல்வனிடத்துத் தோன்றியதாக வேதங்களிற் சொல்லப்பட்டிருப்பதால், ஜகத்துற்பத்தி விஷயமாய் வேத சிவாகம வாக்கியங்கள் முரணுதலில்லை யென உண்மை வேதாந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும் உணர்வர். ஆன்மா ஏகம் என்ற வேதவாக்கியத்திற்குப் பரமான்மா ஜீவான்மாக்கள் எல்லாமொன்றேயெனப் போலி வேதாந்திகள் பொருள் கொண்டு, பசுப் பலகோடி யென்னும் சிவாகம வாக்கியத்தோடு முரணுவதாகக் காணுவர். ஆனால் உண்மை வேதாந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும் மேற்கூறிய வேதவாக்கியத்திலுள்ள ஆன்மசப்தம் பரமான்மாவினையே குறிக்கும் எனவுணர்ந்து அவ்வாக்கியம் சிவாகமவாக்கியத்தினோடு முரணுதலில்லை யென்றுந் தெரிவர். இன்னும் பல திருட்டாந்தங்களால், வேத சிவாகமங்கள் ஒன்றோடொன்று முரணுதலில்லை யென விளக்கலாம் என்பவே உபநிடத சிவாகமங்களாகிய வேதாந்த சித்தாந்தங்கள் ஒன்றினோடொன்று அபேதமென்பது பெற்றது.

5. மேற்குறித்த இரண்டு நூல்களும் ஒன்றோடொன்று முரணுதலில்லையென்பதே சைவ சித்தாந்திகளின் துணிபு. அதுபற்றியே அவர்கள் சித்தாந்தத்தை வைதீக சைவம் என்றும், வேதாகமோக்த சைவசித்தாந்த மென்றும் கூறுகிறார்கள்.

"வேதமோடாகம மெய்யாமிறைவனூல்
ஓதும்பொதுவுஞ் சிறப்புமென்றுன்னுக
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்னிற் பெரியோர்க் கபேதமே."

என்னுஞ் சைவத் திருமுறையிலொன்றாகிய திருமந்திரத்தின் கருத்துமிதுவே. அப்படியே சைவசித்தாந்த சாத்திரத்திலொன்றாகிய சித்தியாரிலும்,

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லனாதியம லன்தருநூ லிரண்டு
மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்."

என விளக்கப்பட்டிருக்கின்றது. என்பவே வேதாந்த நூல் சித்தாந்த நூலிரண்டும், பரம்பொருளால் அருளிச் செய்யப்பட்டதென்

றும், இரண்டும் அபேதமென்றும், அவற்றுள் ஒன்று பொது, மற்றொன்று சிறப்பென்றும் பெற்றது. ஒரு நூலின் பொதுவியல் அதன் சிறப்பியலோடு முரணாதவாறுபோல, பொது நூலாகிய வேதாந்தமும் சிறப்பு நூலோடு முரணாதாகும். என்றாலும் வேதாந்தநூலில், பல பூர்வபட்சங்களும் சித்தாந்தமொன்று முளவாக, அவற்றிற் சித்தாந்த மொன்றைத் தெளிந்தும் பிரித்தெடுத்துக்கொண்டு, சித்தாந்த நூல்களாகிய சிவாகமங்கள் விளக்குவதால், சித்தாந்தம் வேதாந்தத்தின் தெளிவெனப்பட்டது. இக்கருத்தினையே சைவசந்தான குரவர்கள் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" என்றும், "வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறத் தடைவர்" என்றும் விளக்கியிருக்கின்றார்கள். இதுபற்றி யிவ்விரண்டும் பேதமெனல் கூடாதாகும். அன்றியும் மேற்குறித்த திருவிருத்தத்தில் வேதம் உலகர்க்கென்றும், சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கென்றுங் கூறியிருத்தலால், வேதம் சத்திநி பாதர்களால் தள்ளத்தக்கதென்பது மின்றாம். உலகர் என்பது சத்திநிபாதர்களையும் அடக்கிநிற்கும். என்பவே சிவாகமங்களை யுணர்ந்து அதன்வழி நிற்கும் பெரியோர்கள், வேதாந்த சித்தாந்த மிரண்டும் அபேதமென வுணர்வார்கள். இக்கருத்தினையே தாயுமானாரும் "வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும் நாதாந்தமோன நலமே பராபரமே" என்றருளினார்கள்.

6. இனி "வேதாந்த சித்தாந்த சமரசம்" என்றதனை யாராய்வாம். இச்சொற்றொடரைத் தாயுமானார் தமது பாசுரங்களின் பலவிடங்களிற் பிரயோகித்திருக்கிறார்கள். இதனுண்மைக் கருத்தை யறியாது, பலரும் பலவாறு விளக்க முயலுகிறார்கள். ஈண்டு கவனிக்க வேண்டியது 'சமரசம்' என்னுஞ் சொல். இச்சமரசம் அனுபவத்திலறியற்பாலது. அதுவும் பெரியோர்களாலேயே அறியற்பாலது. அப்பெரியோர்களையே "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்" எனத் தாயுமானார் கூறியுள்ளார்கள். இச்சமரச அனுபவம் வேதாந்தத்தின் சாரம் சைவ சித்தாந்தம் என்பதனோடு மிகப் பொருத்தமே. எவ்வாறெனில் கூறுதும்: வேதாந்தத்தைக் கனிக்கும், சித்தாந்தத்தை யதன் சாரத்திற்கும் உவமையாகக் குமரகுருபர சுவாமிகள் "ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த, ஆராவின்ப வருங்கனி பிழிந்த, சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே" எனப் பாசுரமருளி யிருக்கிறார்கள். இவ்வுவமையே ஈண்டு கவனிக்கற்பாலது. ஒரு சிறு குழந்தையிடம் ஒரு கனியைக் கொடுத்தால், அக்குழந்தை அதன்தோல், கொட்டை

சக்கை, சாரம் எல்லாவற்றையுஞ் சேர்த்துத் தின்னும். அக்குழந்தையின் நாவுக்கு, அத்தோலின் ரசம், கொட்டையின் ரசம், சக்கையின் ரசம், எல்லா ரசங்களுந் தட்டுவதாகும். ஆனால் பெரியோர்களோ, அத்தோலை நீக்கி, அக்கொட்டையைக் கழித்து, சக்கையை யுமிழ்ந்துச் சாரமொன்றனை யுட்கொள்வர். அவர் நாவுக்குச் சாரத்தி னினிப் பொன்றே தட்டுவதாகும். அவர்க்குக் கனியின் ரசமும், அதனினின்றும் பிரித்தெடுத்துச் சர்ப்பத்தாக்கப்பட்டுள்ள சாரத்தின் ரசமும் ஒன்றே. அவ்விரண்டினையும் சமரசமாகவே காண்பர். அதுபோலவே பெரியோர்கள், வேதாந்தத்தை யறிந்து அதன் பொருளை யனுபவிக்கும்போது, அதிலுள்ள பல பூர்வபட்சங்களையுங் களைந்து, அதன் கண்ணுள்ள சித்தாந்த மொன்றனையே யனுபவிப்பார். அதிலுள்ள பூர்வபட்சங்களொன்றும் அவரறிவிற் படியாது. அவரறிவிற்கு, வேதாந்தத்தினின்றும் சித்தாந்த அமிர்தமே படிவதாகும். அவரே வேதாந்த சித்தாந்த மிரண்டினையும் சமரசமாகக் காண்பார்கள். இவரையே தாயுமானார் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்" என ஓதினார்கள். இவரது அனுபவமே வேதாந்த சித்தாந்த சமரச அனுபவம். இதுவே இச்சமரசத்தின் உண்மைப் பொருள்.

7. வேதாந்த சித்தாந்தங்களை யிவ்வாறு சமரசமாகக் காணுதல் எவ்வாறு கூடும் என்பது நாம் அடுத்து ஆராயக் கிடப்பது. இவ்வாராய்ச்சி என்போலியர்களாற் செய்யக் கிடப்பதன்றாயினும் இயன்றவளவில் ஆராய்வாம். வேதாந்தத்தில் பரஜீவர்கள் வேறல்லர் என்னும் வாக்கியம் காணப்படும். சிவாகமங்களிலோ பரஜீவர்கள் வெவ்வேறு பொருள்களென்றும், ஆனால் அவைகள் பிரிப்பின்றிக் கலந்து கிடக்கின்றனவென்றும், பரம்பொரு ளறிவிக்கவே ஜீவப்பொரு ளறிகிறதென்றும், என்றாலு மறிவித்தா லறிதற்கும், அறிவு வேண்டுமாதலால், ஜீவனுக்குந் தனியறிவுண்டே யென்றும், இவ்விரண்டறிவுகளும் ஒன்றிலொன்று பிரிப்பின்றிக் கிடப்பதால், இவற்றின் றன்மைகளைத் தனித்துக் காணவராதென்றும், பரஜீவர்களி னறிவிச்சை செயல்களுமப்படியே யென்றும் எனவே ஜீவப்பொருளின் றன்மைகளி யாவும் பரம்பொருளின் றன்மையில் அடங்கிக் கிடப்பனவாமென்றும், அவைகளின் றன்மைகளுக்குப் பரம்பொருளின் றன்மையே தாரகமாமென்றும், அத்தாரகமின்றேல் ஜீவர்களின் றன்மைகளே யின்றாமென்றும் கூறப்பட்டுள்ளன. இவற்றைச் சமரசமாகக் கொள்ளும் பெரியோர்கள் பரஜீவர்கள் கேவலம் வேறல்லர். ஆனால் எந்தக் காலத்திலும் பரம்

பொருளின் றன்மையையின்றி ஜீவப்பொருளின் றன்மை யின்றாத லால், அவ்வாறிருக்குமளவில், பரஜீவர்கள் வேறல்லர் என்றும் உணர் வர். இவர் பரஜீவர்கள் ஒரே பொருள் என்னும் பூர்வபட்சத்தினைத் தன்னனுபவத்திற் காணமாட்டார். இவர்க்குச் சிவாகமங்களும் வேதாந்தங்களும் அனுபவத்தில் ஒரேயுண்மையை யுணர்த்துவதாகும். இவ்வாறனுபவித்தலே வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம். இக்கருத் தினையே தாயுமானார்,

> " சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல் "
>
> " யானெனுந்தன்மை நின்னையின்றி யில்லாத தன்மையால் "
>
> " வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம் "

என்றருளிச் செய்துள்ளார்கள்.

திருச்சிற்றம்பலம்

V. P. காந்திமதிநாதப் பிள்ளை.

---

## வேதாங்கங்கள்

(பூர்ணசந்திரோதயப் பிரசுரம்)

அங்கம் என்றால் அவயவம். வேதாங்கம் என்பது வேதத்தின் அவயவம். அதாவது வேதங்களைப் படிப்பதற்கும், அறிவதற்கும், அவைகளின் கொள்கைகளை ப்ரயோகிப்பதற்கும் வேண்டிய விதிகளை, விவரமாய் வேதாங்கங்கள் கூறுகின்றன. தவிரவும் பிற் கூறப்படும் அறுவகை வேதாங்கங்கள் வேதங்களையே ஆதாரமாக வுடையவை களாயும், அவைகளில் உள்ள விசேஷ விதிகள் முன் கூறப்பட்ட வேதங்களையும் ப்ராம்மணங்களையும் ஆதாரமாய்ப் பெற்றவைகளாயு மிருப்பதுடன், பிற்பட்டு ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றப்பட்டுள்ள வ்யாகரணங்கள், ஜ்யோதிஷங்கள், கல்ப ஸூத்ரங்கள், நிருக்தங்கள், நிகண்டுகள் முதலான ஒப்பற்ற க்ரந்தங்களுக்கு மூலக்ரந்தங்களாகவும் அமைந்திருக்கின்றன.

கால வரையறையில், ப்ராம்மணங்களுக்கு வெகு காலத்துக்குப் பிறகு வேதாங்கங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். வேத பாஷை யைப் பார்க்கிலும் வேதாங்க பாஷையானது சற்று சுலபமாயும், ஸரஸ மாயும் இருக்கின்றது.

## ஆறு வேதாங்கங்கள்

ஶிக்ஷா வ்யாகரண : ஹந்த :
நிருக்தம் ஜ்யௌதிஷ ததா|
கல்ப : வேதிஷ ஙமாதி
வேதஹ்யாஹர்மநீஷிண :

(1) ஶிக்ஷா (எழுத்தியல், உச்சரிப்பு முதலானவைகளைக் கூறும் சாஸ்த்ரம்)

(2) வ்யாகரணம் (இலக்கணம்)

(3) சந்தஸ் (யாப்பியல் அல்லது விருத்தம் முதலானவைகளைப் பற்றிக் கூறும் சாஸ்த்ரம்)

(4) நிருக்தம் (சொல்லியல்)

(5) ஜ்யோதிஷம் (வான நூல் முதலானவை)

(6) கல்பம் (யக்ஞபாகாதிக்ரதுக்களைப் பற்றிக் கூறும் சாஸ்த்ரம்)

குறிப்பு:—இவற்றுள் சிக்ஷையும் சந்தஸும் வேதங்களை முறைப் படி வாசிப்பதற்கும் உச்சரிப்பதற்கும், வ்யாகரணமும் நிருக்தமும் அவைகளின் கருத்துக்களை யறிவதற்கும், ஜ்யோதிஷம் என்பது எந் தக்காலத்தில் எந்த விதமான க்ரதுக்கள் செய்ய வேண்டுமென்று கால நிர்ணயம் செய்வதற்கும், கல்பம் என்பது வேதகர்மங்கள் சரி யானபடி நடத்தவேண்டிய முறைகளை யறிவதற்கும் அவசியமானவை.

### (1) சிக்ஷை. (Phonetics.)

ஶிக்ஷை என்பது ஶிக்ஷ=கற்றுக்கொள், என்னும் தாதுவி லிருந்து வந்தது. அதாவது கற்பதற்குச் சாதனமான விதிகளைக் கூறும் நூல் என்ற பொருள். சிக்ஷா விதிகள் முன் தைத்திரீய ஆரண் யகத்திலும் தைத்திரீய ப்ராம்மணத்திலும் சேர்ந்திருக்க வேண்டு மென்பது சிலர் அபிப்ராயம்.

ப்ரதிசாகைகள்:—வெகுகாலம் வரை, வேதங்கள் ஒரு சிஷ்ய பரம் பரையில் வாக்கால் அத்யயனம் செய்யப்பட்டு வந்தனவே யொழிய, அவைகள் ஏடுகளில் எழுதப்படவில்லை. அவைகளின் ஸ்வரங்களையும் உச்சரிப்புக்களையும் பூர்வாநுஷ்டான க்ரமம் தப்பாது காப்பாற்று வதற்காகச் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. காலதேச பேதத்தால் ஸ்வரம் முதலானவை பல பேதங்கள் அடைந்தன. ப்ரதிசாகைகள் மேற்கூறிய ஸ்வரம் முதலானவைகளை யறியச் சாதக

மாக சில விதிகளைக் கூறுகின்றன. பிற்பட்டு இயற்றப்பட்ட பாணி னீயம் முதலான வ்யாகரணங்களுக்கு ப்ரதிசாகையும் மூலக்ரந்தமா யிருக்கின்றது.

2. சாகைகள்:—முன் கூறியவாறு காலதேச பேதத்தால் வேத பாடங்கள் பல பேதங்களடைந்தன. வேதங்களின் மொத்தத் தொகுதி ஸம்ஹிதை. ஆனால் ஒவ்வொரு வேதமும் பல பேதங்களை அடைந்தனவாகையால், ஒவ்வொரு பேதத்துக்கும் சாகை என்று பெயர். ரிக்வேதத்துக்குப் பல சாகைகள் இருந்தனவாகிலும், இப் பொழுது ஒன்றுதான் அகப்பட்டிருக்கின்றது. அதுதான் சாகலசாகை. ஒவ்வொரு சாகைக்கும் ப்ராதி சாகையுண்டு. சாகலசாகையைச் சேர்ந் தது, சௌனகரால் இயற்றப்பட்ட ப்ரதிசாகை. பாணினியால் இயற்றப்பட்ட சிக்ஷா விதிகள் எல்லா வேதங்களுக்கும் பொதுவா யிருக்கின்றன.

சாகை (கிளை) என்பது மதபேதம். (School) அல்லது வேதத் தின் ஒரு பாகம் என்று சிலர் அபிப்பிராயப்படுவதுண்டு. பாடபேத மென்பதே அதன் உண்மையான கருத்து.

3. சரணம்:—சாகையென்பது பாடபேதம். சரணம் என்பது மதபேதம் (School). முன் சாகை அல்லது பாட பேதத்தை யனு சரித்தே சரணம் அல்லது மதபேதமும் ஏற்பட்டதால் இவ்விருபதங் களும் சில விடங்களில் வித்யாஸமின்றி உபயோகப்பட்டிருக்கின்றன. "தத்பரி சரணௌ இதரௌவேதௌ" மற்ற இரண்டு (ஸாம யஜுர்) வேதங்களும் அதன் (ரிக்வேதத்தின்) சரணங்கள் (பிரிவுகள்) என்ற இடத்தில் சரணம் என்பது பிரிவு எனும் பொருள்பட ப்ரயோகிக் கப்பட்டிருக்கின்றது.

4. பரிஷத் (Academy):—அமரப்படி பரிஷத் என்றால் ஸபை அல்லது கோஷ்டி என்றருத்தம். மனுஸ்மிருதி ப்ரகாரம், பரிஷத் என்பது ஞான சாஸ்த்ரங்கள், புராண இதிஹாஸங்கள், தர்ம சாஸ்த் ரங்கள் முதலானவைகளில் சிறந்த அறிவுடைய 21 ப்ராமணர்கள் சேர்ந்ததாய் இருக்கவேண்டும். ஸந்தேகமான விஷயங்களை ஆராய்ந்து அறிவிக்க அவர்கள் சக்தர்களாகவு மிருக்க வேண்டும். இப்படிப்பட்ட பரிஷத்துக்கள் (Academies) நமது தேசத்தில் பூர்வகாலத்தில் ஆங் காங்கு பல இருந்தனவென்று தோன்றுகின்றது.

"சுவேத கேது பாஞ்சால பரிஷத்துக்குப் போனார்" என்று ப்ருஹதாரண்யகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. வேதாத்யயனம் செய்து அக்னி ஹோத்ராதிகள் சரிவர நடத்திவரும் ப்ராம்மணர்கள்

நால்வர் அல்லது மூவர்கள்கூடச் சேர்ந்து ஒரு பரிஷத் ஆகலாம் என்று பராசரர் கூறுகின்றார். குரு சிஷ்ய பரம்பரையாய் ஒரு வேத சாகையை அனுஷ்டிக்கும் முறையே சரணம். ஆனால் ஒரு முக்ய ஸ்தலத்தில் பல வித்வான்கள் சேர்ந்து வேத அத்யயனம், விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதே பரிஷத். ஒரு சரணக்காரர் பல பரிஷத்தைச் சேர்ந்திருக்கலாம். ஒரு பரிஷத்தில் பல சரணக்காரரிருக்கலாம்.

தைத்திரீய உபநிஷத்தில் (I ii i) ஶீக்ஷாம வ்யாவ்யாஸ்யமா: வர்ண: ஸ்வர: மாத்ராபலம் ஸாம ஸந்தாந: இத்யுக்த: ஶீக்ஷாயா்யாய: ஶீக்ஷை (அல்லது உச்சரிப்பு) சாஸ்த்ரத்தைப்பற்றிக் கூறுவோம். அது, வர்ணம் (அக்ஷரங்கள்) ஸ்வரம் (உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம்) மாத்ரை (அளபெடை) பலம் (உச்சரிக்கப் போதுமான சக்தி) ஸாமம் (அக்ஷரங்களை ராகத்துடன் உச்சரித்தல்) ஸந்தானம் (தொடர்ச்சி) என அறுவகையாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

## 2. வ்யாகரணம் (Grammar.)

வ்யாகரணம் என்னும் வேதாங்கமானது வேத பாஷையின் இலக்கண விதிகளைப்பற்றிக் கூறுவது. பிற்பட்டு இயற்றப்பட்ட பாணிணீயம் என்ற சிறந்த வ்யாகரணத்துக்கு இது மூலக்ரந்தமாய் விளங்குகின்றது. இவ்வகுப்பைச் சேர்ந்ததும், பாணிணீயத்துக்கு முற்பட்டதுமான இரண்டு க்ரந்தங்கள் இருக்கின்றன. அவையாவன, உணாதி (உணாதி) ஸூத்ரங்கள் அதாவது தாதுக்களினின்றும் பெயர்ச்சொற்கள் உண்டாகும் விதிகளடங்கிய நூலொன்று. ஸ்வரத்தைப்பற்றிக் கூறும் ஸாந்தனுச்சாரியர் ஸூத்ரங்கள், ஆக இரண்டு க்ரந்தங்கள். உணாதி என்பது உண் முதலான தாதுக்களைப் பற்றிய ஸூத்ரங்களென அர்த்தம். உண் என்பது உ என்ற தாதுவைக் குறிக்கும். இதை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஆதியில் வேத பதங்களுக்கு மாத்திரம் இது இயற்றப்பட்டதாகிலும், பிற்காலத்தில், இன்னும் சில பதங்கள் சேர்த்து விவரமாய் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும் பாணிணீயத்தால் இவ்விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

## 3. சந்தஸ் (Prosody)

வேதங்களின் மாத்ரை (Meters) களைப்பற்றிக் கூறுவது சந்தஸ் என்னும் யாப்பியலாகும். சந்தஸைப்பற்றி ரிக்வேத மந்திரங்களிலும் ப்ராம்மணங்களிலும் சில விடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆரண்யங்களிலும் உபநிஷத்துக்களிலும் சில அத்யாயங்கள் முழுமையும் சந்தஸைப்பற்றியே கூறுகின்றன.

சந்தஸ் என்னும் வேதாங்கத்தைப் பற்றிய புராதன ஆதார நூல் பிங்கள ஸூத்ரம் என்பதே. இது பிங்கள முனிவரால் இயற்றப்பட்டது.

## 4. நிருக்தம் (Etymology.)

நிருக்தம் என்பது பதங்களின் லக்ஷணங்களைப்பற்றிக் கூறும் சொல்லியல் அல்லது பதவிலக்கணம் என்ற நூலாகும். இதற்கு மூல க்ரந்தங்கள் யாஸ்கர் என்பவரால் இயற்றப்பட்ட நிருக்தமும் அதைச் சேர்ந்த வ்யாக்யானமும். நிகண்டு, நிகமம், தைவதம் என நிருக்தம் மூவகைப்படும்.

நிகண்டு (Synonyms) சொற்களுக்கு அர்த்தங்களைக் கூறுவதே நிகண்டு. யாஸ்கரால் இயற்றப்பட்ட நிருக்தத்தில் முதல் மூன்று அத்யாயங்களும் நிகண்டு என்பதே. அமரம், வைஜயந்தி, ஹலாயுதம் முதலான 10-வகை நிகண்டுகள் ப்ரஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன.

நிகமம் என்றால் வேதம் என்றர்த்தம். இதில் வேதபத லக்ஷணங்களைப்பற்றி விசேஷமாய்க் கூறப்படும். யாஸ்கர் நிருக்தத்தின் 4-வது அத்யாயம் நிகமத்தைப்பற்றி விவரிக்கின்றது.

தைவதம் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூவுலகிலுமுள்ள தேவர்களைப்பற்றி விவரிக்கும் நூல். இது யாஸ்க நிருக்தத்தின் 5-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

## 5. ஜ்யோதிஷம் (Astronomy)

ஜ்யோதிஷம் 5-வது வேதாங்கம். ஜ்யோதி - நக்ஷத்ரம். நக்ஷத்ர சாஸ்த்ரம் என்பது முதற் பொருள். அதாவது வான நூல் எனப்படும் முக்ய சாஸ்த்ரமாகும். முற்காலத்தில் வேதகர்மங்களைக் கால க்ரமம் தவறாது நடத்துவதற்கும் கால நிர்ணயம் செய்வதற்கும் சாதனமாக இந்நூல் உண்டாயிருக்கிறது. நக்ஷத்ரங்களின் நிலைகளையும், க்ரஹ நிலைகளையும் பார்த்து, திதி, வாரம், நக்ஷத்ரம், பக்ஷம், மாஸம், ரிது, அயநம், வர்ஷங்கள் நிர்ணயிக்கும் வகை இந்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆதிகாலத்தில் சாந்த்ரமானமே வழங்கி வந்தது. இப்பொழுது அகப்பட்டிருக்கும் ஜ்யோதிஷ க்ரந்தங்களில் ஆதியாயுள்ளது வேதாங்க ஜ்யோதிஷமேயாம். அது சுமார் கி. மு. 2000 வருஷங்களுக்கு முற்பட்டே யிருக்கவேண்டுமென்று வேத வித்யா நிபுணர் கூறுகின்றனர்.

## 6. கல்பம் (Ceremonials)

இது 6-வது வேதாங்கமாகும். இதைச்சேர்ந்த க்ரந்தங்கள் பூர்த்தியாயிருக்கின்றன. ஒவ்வொரு ப்ராம்மணத்துக்கும் கல்பசாஸ்த்ரம் இருப்பதுடன் ஒவ்வொரு கல்பத்துக்கும் ஸூத்ரங்களும் இருக்கின்றன.

வைதிக கர்மங்கள் செய்ய வேண்டிய முறைகளையும், அவச்யத்தையும் பற்றி விசேஷமாய் இந்நூல்கள் கூறும். இவைகள் ப்ராம்மணங்களைப் பார்க்கிலும் சுருக்கமாகவும், கர்மங்களுக்கு வேண்டிய வளவு மாத்ரமும் கூறும்.

மேற்கூறிய அறுவகை வேதாங்கங்களும் வேதகாலமாகிய மந்த்ர, ப்ராம்மண காலத்துக்குப் பிறகு, அவைகளை எளிதில் அறியவும், அனுஷ்டிக்கவும் ஸாதனமாக இயற்றப்பட்டன. இவைகள், பிற்பட்டு இயற்றப்பட்டுள்ள, எண்ணிறந்த நூல்களுக்கு மூல ஆதாரங்களாயிருப்பது மன்றி, இவைகளில் காணப்படும் முக்ய விஷயங்கள், மந்த்ரங்களிலும், ப்ராம்மணங்களிலும் ஆங்காங்குகாணப்படுகின்றன. இவைகள் அறுவகையாய்ப் பிரிந்து தனித்தனி சாஸ்த்ரமாக ஏற்பட்டகாலம் சரிவர இந்நிலைமையில் நிர்ணயிக்க இயலாது.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் B. A., B. L.

---

## நித்திய கருமம்

(இந்துசாதனம் 10-12-23.)

(யாழ்ப்பாணம் சைவப் பிரசாரகர் ஸ்ரீ த. குமாரசாமிப் பிள்ளையவர்கள் எழுதியது)

நித்திய கருமமென்பது சைவ சமயிகளாயுள்ளோர் சமயப் பிரவேசஞ் செய்யப்பெற்ற நாள் முதல் தினந்தோறும் ஆவசியகம் செய்து வரவேண்டிய கடமையாகும். இது மனம், வாக்கு, காயமென்னும் மூன்றினாலும் செய்யப் பெறுவதாம். மனம் பாவிக்கும்; வாக்கு மந்திரஞ் செபிக்கும்; காயம் கிரியையைச் செய்யும். மனம் ஒருவழி நிற்க, வாக்குப் பிறிதொரு வழி நிற்க, காயம் மற்றொரு வழி நிற்க எவ்வித செயலைச் செய்தாலும் அச்செயலின் பயனை அடைய முடியாது. இந்த மூன்று கரணங்களையும் ஒருவழிப்படுத்தி நற்செயல்களைச் செய்து தெய்வ வழிபாட்டில் நிறுத்துவோமானால் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொரு"ளாகிய சிவ பரம்பொருள் அச்செயலை ஏற்றுப் பலன் அருளும். "மனமது நினைய வாக்கு வழுத்த

மந்திரங்கள் சொல்ல, இனமலர் கையிற்கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச், சினமுதலகற்றி வாழுஞ் செயலறமானல் யார்க்கு, மூன மொரு தெய்வமெங்குஞ் செயற்குமுன் னிலையாமன்றே" என்னும் வாக்கின் பொருளை மனத்திற் கொள்ளுதல் வேண்டும். நாம் இருந்து வசிக்கின்ற வீட்டைப் பெருக்கி மெழுகி அழுக்குகளைத் திரட்டி ஒரு புறத்து ஒதுக்கிச் சுத்தமாய் வைத்திருந்து வாழுதல் போலவே, எங்கள் தேகமாகிய வீட்டையும் மந்திரம், கிரியை, பாவனை என்னும் மூவகைக் கருமங்களாலும் சுத்தப்படுத்தி வாழுதற் பொருட்டே நித்திய கருமமென்பது ஆவசியகமென நூல்கள் கூறுகின்றன. ஒரு தினத்திற் சுத்தப்படுத்தினும் பின்னரும் அழுக்கு வந்து வீடுகளிற் கூடுதல்போல, இத்தேகமாகிய வீட்டிலும் பிரபஞ்ச மயக்காலாகும் அழுக்கு கணந்தோறும் வந்து கூடும். எந்த அழுக்குள்ள இடத்தில் யார் இருந்து பயில்கின்றரோ அந்த அழுக்கு அவர்மேற் பொருந்தியிருக்கக் காண்கின்றேம். அங்ஙனமே இத்தேகமாகிய வீட்டிலும் அழுக்கு வந்து அதிகமாகக் கூடியிருக்குமாயின், ஆன்மாக்களாகிய எங்கள்மேல் அவ்வழுக்குகள் பொருந்தப்பெறும். பொருந்தவே கீழ்மையாகிய எண்ணம் தொழில் நடை என்பன நிகழும். ஆதலின் அவ்வழுக்குகளை நித்தியகருமச் செயலால் திரட்டி ஒதுக்கிச் சுட்டெரித்து விட்டால் தூய்மையுடையரா யிருந்து வாழலாம் என்பதாம். நிரீக்ஷணம் என்னும் பார்வை முதலிய முத்திரைகளாலும் ஒவ்வொரு தத்துவங்களையும் சுத்தி செய்வதாகிய ஆசமனத்தாலும் சிவமாந்தன்மை எய்துதற்கடையாளமாகிய நியாசத்தாலும் முக்காரண ஒற்றுமை நெறியால் முதல்வனருள் கொண்டு மும்மல நீக்கமும் சிவப்பிரகாசமும் பெறுதற் கடையாளமாகிய திரிபுண்டரத்தாலும் இன்னும் இவை போன்ற பல செயல்களினுலும் அழுக்குகளைத் திரட்டி ஒன்ருக்கி மூக்கின் வழியாக வெளியே வந்ததாகப் பாவித்துப் பெருவிரல் நுனியில் சுவாலிக்கும் அக்கினியில் விட்டுச் சுட்டெரிக்கும் செயலினுலும் இனிது புலப்படும். நாத சொரூபியாகிய சிவத்தின் மணம் எங்கணும் பரிமளிக்கும் பொருட்டுச் செய்வதாகிய மந்திர செபம் சகல கன்மங்களையும் அகற்றும். நாதவழியால் இயங்கப் பெறுகின்ற அணுக்களும் அணுக்களின் கூட்டமாகிய ஒலியும் ஒலியின் காரியமாகிய அக்கரங்களும் அக்கரங்களின் காரியமாகிய சொல்லும் மந்திரமாயிருக்குமாயில், சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்கின்ற வேறுபாட்டை மூலாதாரத்தினின்று எழுந்து அவ்வத்தானங்களிற் படிந்து அடைகின்ற முறையால் அவ்வவ்விடங்களிலெல்லாம் அந்த

மந்திர மணமே மலிந்திருக்கும். ஆதலின் தத்துவங்கள் யாவற்றினும் இந்த மந்திர மணம் வீசவே சிவமணம் தானே பரிமளிக்கும். அவ்வாறு பரிமளிக்குங்கால் தத்துவங்கள் தூய்மையுடையனவா யிருக்கும். தத்துவ சகிதனாகிய ஆன்மாவும் தூய்மையுடையதாய் மேலான எண்ணமும் மேலான செயலும் மேலான நடையும் உடையதாய் இகபர மிரண்டிலும் இன்பத்தை யடையும். இவ்வித உண்மைகளெல்லா மிருக்கவும் இவற்றைச் சிறிதும் உற்றுணராது சிவதீக்கை பெற்ற அன்றே தக்கிணையோடு கொடுத்துவிடுபவர் சிலர். ஒருவாறு தப்பிவந்தால் வீட்டிலே வைத்தவிடத்தில் மறந்துவிடுபவர் சிலர். சீவிய முயற்சிக்கே நேரமில்லை நித்தியகருமஞ் செய்வதெப்படி எனப் பிதற்றுவோர் சிலர். குழந்தைக்குக் கொஞ்ச வயசு ஆதலால் இப்போது குறிவைக்கக் கூடாது என்று தடுத்துவிடுவோர் சிலர். இவ்விதம் உண்மைக்கு வேறாகிய உணர்ச்சியுடையர்களாய், எங்கள் பிள்ளைகள் நல்லவர்களாய்க் காணவில்லையே யென்று கவலைப்படுகின்றனர். நினைப்பது செய்வது நடப்பது ஆதியவற்றுக்குக் காரணமாகிய மன முதலிய கருவி கரணங்களைத் தூய்மைப் படுத்துதற்கு ஏதுவாகிய நித்திய கருமத்தைச் சிரத்தையோடு அநுட்டித்து வந்தால் யாவரும் சுத்தமுடையவர்களாயும் நல்லவர்களாயுங் காணப்படுவர். உள்ளே மனஞ் சரியாய் இருந்தாற் போதும், இந்த வெளிப் பூச்சிலென்ன இருக்கிறதென்று பிதற்றுவோருஞ் சிலர் உளர். உள்ளே ஒரு நோய் வந்தால் வெளியிலே பூச்சுப் பூசினவுடன் உள்ளிருக்கும் நோய் தணிவதை யாவரும் கண்முன் காணலாம். உள்ளே இருக்கின்ற பசியை வெளியே இருக்கின்ற உணவு வெளியிலுள்ள வாயின் வழியாகச் சென்று தணிப்பதை யாவருமறிவர். இவற்றையுணர்ந்து சைவ சமயிகளாகிய நம்மவர்களெல்லோரும் சமய அபிமான முடையவர்களாய்ச் சாத்திர உண்மைகளைச் சிந்தித்து, தவறாது நித்திய கருமத்தைத் தங்கள் செய்கடன் என்று உறுதிப்பட்ட மனமுடையவர்களாய் அநுட்டித்து வர வேண்டும்.

---

## இக்காலத்து வாலிபர் நிலைமை

இந்து சாதனம்

பண்டைக்காலத்திலே உள்ளவர்களில் அனேகர் வித்துவான்களாகவும், ஞானிகளாகவும், திடகாத்திர முடையவர்களாகவும், பூரணாயுசுடையவர்களாகவும், நீதியானவழிகளைக் கைக்கொண்டொழுகுபவர்களாகவும், பல பல சாஸ்திரப் பயிற்சி உடையவர்களாகவும் இருந்

தார்கள். இவ்வித சிறப்புகளை அக்காலத்தவர் எவ்விதமாகப் பெற்றூர்களென்பதைச் சிறிது ஆராய்வாம். அக்காலத்திலுள்ள வாலிபர்கள் காலந்தோறும் அவதரித்த மகான்களாலியற்றப்பட்ட நீதி நூல்களையும், ஞானநூல்களையும், உலகசரித்திர நூல்களையும் விரும்பிக் கற்றூர்கள். சிஷர்கள் குரு வாக்கை மேல்வாக்காக மதித்து வந்தார்கள். சமயசாஸ்திரங்களைக் கற்றூர்கள். ஒவ்வொருநாளுஞ் செய்யவேண்டிய கர்மானுஷ்டானங்களைச் சிரத்தையோடு செய்துவந்தார்கள். நீதிசாஸ்திரங்களைக்கற்று அதன்வழி ஒழுகினூர்கள். ஆன்மார்த்த முறைகளிலும் பயிற்றப்பட்டார்கள். நல்லொழுக்கம் பெரியோரை வழிபடுதல் சத்தியநெறி நிற்றல் வீரத்தன்மை ஆலயந்தொழுதல் முதலிய முறைகளிற் பயிற்றப்பட்டார்கள். சாஸ்திரங்களைக் கற்பதோடமையாது அவைகளை அனுட்டிக்கவும் பயிற்றப்பட்டார்கள். சரீர அப்பியாச முறைகளில் வெகுசிரமம் பூண்டிருந்தார்கள். அக்காலத்திலே சத்தியமே மாதா என்றும் அறிவே பிதா என்றும் தருமமே சகோதரனென்றும் சாந்தமே நலனுறு தாரமென்றும் இன்னோரன்ன கொள்கைகளில் அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள். இவ்வித முறைகளைக்கற்று அவைகளின் வழியே ஒழுகுமாறு பயிற்றப்பட்ட வாலிபர்கள் கல்வி கற்கும் காலவெல்லையைக்கடந்து உலகவியாபாரத்தில் பிரவேசிக்கின்ற காலத்திலே கடவுட்பக்தி யுடையவர்களாகவும் நீதிமுறை தெரிந்தவர்களாகவும் திடகாத்திர முடையவர்களாகவும் விளங்கினூர்கள். உத்தியோகவழியிற் செல்வோர், வியாபார முயற்சியிற்பிரவேசிப்போர், ஆசிரியராவோர் கமத்தொழில் செய்வோர் ஆகிய எல்லோரும் தங்கள் தங்கள் தொழில்களை முறைப்படி செய்துவந்தார்கள். அவர்கள் நேர்மை தவறுகின்ற காலங்களிலே சிலையில் எழுத்துக்குச் சமானமாக இளமையிற் கற்றுக்கொண்ட நீதி வாக்கியங்கள் மலையிலக்காக முன்வந்து தடுப்பனவாகும். இத்தகைய வாலிபர்கள் இல்வாழ்க்கையிற் பிரவேசிக்கும் காலத்திலே இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்ற துணையாயிருந்து இல்லறதருமங்களைச் செவ்வனே நடத்தி வந்தார்கள்.

இக்காலத்து வாலிபர்களுக்கு லௌகிகக் கல்விமாத்திரம் கற்பிக்கப்படுகின்றது. ஏனைய நூல்கள் புறக்கணிக்கப்பட்டன. நீதிசாஸ்திரங்களைக் கல்லாமையினூலே நீதி குன்றியது. சரீராப்பியாச மில்லாமையினூல் தேகபலம் இல்லாதொழிந்தது. சமய நூலுணர்ச்சி யின்மையினூல் ஆலயசேவை அடிதலை மாறியது. உலோகாயதக் கொள்கைகள் மலிந்து, இல்வாழ்க்கை விபரீதமாகக் கொள்ளப்பட்டது. தருமச் சொத்துக்கள் அநியாயமாகச் செலவு செய்யப்படுகின்றன. ஆங்கிலக்

கல்வி கற்பித்தலில் பெற்றாருடைய நோக்கம் பணம் சம்பாதித்தலே யாம்; சிறுவர்களுடைய நோக்கமும் அதுவேயாம். ஏழாம் வகுப்பு வரையில் ஆங்கிலங் கற்றுவிட்டால் தோட்டப் பகுதிகளுக்கு அல்லது பிரதான நகரங்களிலுள்ள வியாபார சமுதாயங்களுக்குச் சென்று பதினைந்து அல்லது இருபது ரூபா வேதனமாக உத்தியோகத்தில் அமர்ந்துவிடுகிறார்கள். இவர்கள் காலை ஐந்து மணிக்கெழுந்து சென்று வேலைத்தலத்திலிருந்து மாலை ஐந்து ஆறுமணிவரையில் வீட்டுக்குத் திரும்பவேண்டியவர்களாகின்றார்கள். ஒரு வருஷத்தில் இரண்டொரு விடுதலையும் இவர்களுக்குண்டு. எல்லாமாக எட்டுப் பத்து நாட்களாகும். சிலர் ஸீனியர் ஜூனியர் முதலிய பரீக்ஷைகளில் தேறியவுடன் செல்வது முண்டு; சிலரினுஞ் சிலர் உயர்தர பரீக்ஷைகளில் தேறியவராயு மிருப்பர்.

இக்காலத்து வாலிபர்களுடைய நோக்கமானது தாங்கள் எப்படியும் படாத சிரமங்களைப் பட்டாயினும் ஆங்கிலம் ஆறும் ஏழாம் வகுப்பு வரையிலாவது கற்கவேண்டுமென்றும் அப்பால் எவ்வித தொழிலாயினும் எவ்வித வருவாயுடையதாயினும் காற்சட்டையினுள்ளே பிரவேசிக்குந் தொழிலாயிருந்தால் மாத்திரம் போதியதென்று கருதி இவ்வித தொழில்களுக்கே தங்கள் வாழ்நாளைத் தத்தஞ் செய்து விடுகின்றார்கள். இவர்கள் இல்வாழ்க்கையில் பிரவேசிக்குங் காலந்தொடங்கி மரணபரியந்தம் சங்கடப் படவேண்டியவர்களாகின்றார்கள். விவாக காலத்தில் சமயகுருவினாற் செய்யப்படு மரிய கிரியைகளை அலட்சியஞ் செய்கின்றார்கள். பிராணாயாமஞ் செய்யத் தெரியாது. சமயதீட்சை யில்லை; சமயகுருவுக்கு மரியாதை செய்யக் கூசுகிறார்கள். அந்நியமத குருமாரைக்கண்டவுடன் மரியாதை செய்து அவர்களுக்கு ஆசனங் கொடுத்து அவர்களோடு ஆங்கிலத்திற் பேசுகிறார்கள். நமது குருமார் அரை உடுப்புட (half naked)னிருப்பதினாலும் ஆங்கிலப் பயிற்சியின்மையினாலும் அவர்களோடு பேசுவதற்கும் அவர்களுக்கு மரியாதை செய்வதற்கும் வெட்கப்படுகின்றார்கள். தருமசாஸ்திரக்கல்வி ஊட்டப்படாமையினாலே தருமச்செய்கைகளில் தலையிடமாட்டார்கள். தங்களோடொத்த கூட்டத்தவர்களோடு சேர்ந்து எந்தவகையிற் செலவு செய்யவேண்டுமோ அந்த வகைக்கெல்லாம் முதலாக நின்று கையொப்ப மிட்டுப் பணங்கொடுப்பர். தாய் தந்தையர்கள் அநுஷ்டித்துவரும் விரதங்களிலும் பிதிர் கருமங்களிலும்நம்பிக்கையில்லை. முற்காலத்திலுள்ள சமயக்கொள்கைகள் தற்கால நாகரிகத்துக்கேற்றனவாகத் திருத்தப் படவேண்டுமென்பர். ஆலயதரிசனம் செய்யப்போகுங் காலங்களில்

எவ்விதமாகப் போகவேண்டுமென்பது தெரியாது. எங்கே நின்று நமஸ்காரஞ்செய்வதென்பது தெரியாது. தோளிலிட்டிருக்கும் அங்கவஸ்திரத்தை அல்லது சட்டையை எடுக்க மனம்வராது இடர்ப்படுகின்றனர். ஆலயத்திலிருக்கும் மூர்த்தியைப் பற்றிய விளக்கமில்லை. அர்ச்சகராற் செய்யப்படுங் கிரியைகளை அவமதிக்கிறார்கள். இவர்களுக்கு ஊட்டப்படும் கல்வியே தற்காலத்தில் நடைபெறும் கொலை களவு கள்காமம் முதலிய பஞ்சமாபாதகங்களுக்கும், பரிதானம் வாங்குதல், நீதி கோடுதல், செய்ந்நன்றி மறத்தல், பெரியோரை அவமதித்தல் முதலான தீமைகளுக்குங் காரணமாகிறது. இத்தகைய சீர்கேடான நிலைமையில் வாலிபர்கள் இருத்தலினாலே தான் இப்போது உலகத்துக்கேற்ற கண்ணியமுடையோரைக் காண்பது அரிதாகிவிட்டது. தானஞ்சுருங்கியது; வானமும் வறண்டது.

ஆதலின் எங்கள் தேசம் ஈடேற வேண்டுமாயின் எங்களை ஒரு தேசத்தவர்கள் என்றும் ஒரு ஜாதியாரென்றும் ஏனையோர் கௌரவப்படுத்த வேண்டுமாயின் இக்காலத்து வாலிபர்கள் பண்டைக்காலத்திலுள்ள ப்ரம்மச் சரியக் கொள்கையை அனுசரித்து ஒழுகுதல் வேண்டும்.

---

## மூடபக்தி

யாதொரு உண்மைக்கமைந்த ஏதுக்களைப் பிரத்தியட்சமாகக் காண்டலின்றி, அவ்வுண்மையை விசுவசித்து, அதன்கட் செயப்படும் பத்தி மூடபத்தி என்று விஞ்ஞானவாதிகள் ஓதுக்குவர். இவர்களுடைய கொள்கையின் வழி சாட்சியக் காட்சிகொண்டு செய்யப்படும் பத்தியும், இயற்கை உணர்ச்சி வாயிலாகச் செய்யப்படும் பத்தியுமாகிய இருதிறப்பத்திகளும் மூடபத்திகளாகவே முற்றும். இங்ஙனமாயின் நியாயாதிபதிகள் சாட்சிகளை வினவி, அச்சாட்சிகளை நம்பிச் செய்யுந் தீர்ப்புகள் எல்லாம் மூடத்தீர்ப்புகள் எனப்படல் வேண்டும். நாம் இயற்கை உணர்ச்சி வாயிலாகப் பெற்றுக்கொண்டே பேச்சுப் பயிற்சியும் மூடப்பயிற்சி எனப்படல் வேண்டும். இந்த வழக்குகள் எல்லாம் மூட வழக்குகளாக ஓதுக்கப்படுமாயின், உலகத்திலே ஒருவரை ஒருவர் நம்புதலுங் கூடாது. மனிதர் எல்லாம் தாம் இயற்கை முறையாற் பெற்றுக்கொண்ட பயிற்சிகளை எடுத்தாளுதலும் கூடாது. இங்ஙனமாயின் உலகத்திலே மனிதர்களது நிலை என்னும் என்பதை இவ்விஞ்ஞான வாதிகள் தாமே சொல்லக்கடவர். உலகத்திலே நிலை

பெற் றுலாவிவரும் இயற்கைத் தருமத்தைச் சிறிதாயினும் உற்று நோக்காது, அறிவின் மேற்கொண்ட அதிமோகத்தால் இவர்கள் தொடுக்கும் விதண்டையன்றோ மூடவாதம் என்று சொல்லத்தக்கது! மூடபத்தியாவது எமது மடமை காரணமாகச் செய்யப்படும் பத்தியாம். சாட்சியக் காட்சி வாயிலாகவும் இயற்கை உணர்ச்சி வாயிலாகவும் நாம் செய்யும் பத்தி எமது மடமைக் காரணமாகச் செய்யப்படும் பத்தி எனப்படமாட்டாது ஆகவே அதனை மூடபத்தி என்பதே மூடபுத்தியாகும். எமது அறிவுக்கு எமது கட்புல செவிப்புலன்கள் வாயில்களாக அமைந்திருத்தல் போலவே, சாட்சியக் காட்சிகளும் இயற்கை உணர்ச்சிகளும் வாயில்களாகும். எமது இயற்கைத் தருமத்தைச் சிறிதும் சிந்தியாமல், அத்தருமத்தின் வழி நாம் ஒழுகும் ஒழுக்கத்தை மூட ஒழுக்கம் என்று சொல்வது அறிவின் பயனுமாயின், அவ்வறிவை அறிவென்று கொள்வது கூடாதாகும்.

சாட்சியக் காட்சிகளும் இயற்கை உணர்ச்சிகளும் நாம் அறிவைச் சாதிக்கும் பக்குவம் அடையுமட்டுமே எமக்கு உபயோகமாதற்குரியனவன்றி அப்பக்குவம் அடைந்தபின், நாம் அவற்றின் வழி ஒழுகுவது மரபின்றெனவாதிப்பாருஞ் சிலருளர். இவர்களும் உலகியலை மறந்து இங்ஙனம் வாதிப்பாரன்றி, உண்மையில் அபிமானங்கொண்டு வாதிப்பாரல்லர். அறிவைச் சாதிக்கும் பக்குவம் அடைந்த உடனே நாம் எல்லாம் சருவஞ்ஞத்துவம் பெற்றிடுவதில்லை. அன்றியும் பிராயம் எய்திய உடனே நாம் எமது மானுட இயற்கைத் தருமத்தை உதறிவிட்டுக் கடவுட்டன்மை அடைந்து விடுவதில்லை. அறிவு விருத்தியுற்ற காலத்தும் எமது இயற்கைத் தருமத்தின் வழி நின்று, கேள்வி முறைகளை அனுசரித்து விருத்தியுறுவதுதானே மானுடராகிய எமக்கெல்லாம் பொதுவாகியதோர் முறையாகும். ஆனால் அறிவைச் சாதிக்கும் பக்குவம் எய்தியபின் அவ்வறிவாற்பயன் பெறுவதும் எமக்குரியதோர் இயற்கை முறையேயாகும். நாம் அறிவைச் சாதிக்கும் ஆற்றல் படைத்துவிட்டேம் என்பதுபற்றி எமது இயற்கைத் தருமத்தை ஒழித்து விடுவதில்லை. அறிவின் முதிர்ந்தமை காரணமாக ஆன்றோர் வாக்கை அலட்சியம் செய்து, எம்மிடத்தே இயற்கை வழி வந்தமைந்த விசுவாசத்தை ஒழித்துவிடுதல் வேண்டும் என்பது மானுஷிக தருமம் ஆகமாட்டாது. இயற்கைக்கு மாறாக ஒழுகுவதுண்டெனின், நாம் ஒரு காலத்தும் விருத்தி அடைவது கூடாது. எமது விருத்தி அனைத்தும் எமது இயற்கை மரபை அனுசரித்தே செல்லுதல் வேண்டும்.

இனி இளமையில் நாம் பெற்ற அறிவுகள் அனைத்தும் உண்மை விளக்கமின்றிக் கிளர்ந்தமையால் அவற்றை நாம் இப்போது கைக் கொண்டு அனுசரித்தல் மரபாகாதென்பதும் விஞ்ஞான வாதிகளிற் சிலரது அபிப்பிராயம். இளமைப்பிராயத்திலே இயற்கை மரபின் வழி எம்மால் உண்மை என்று கொள்ளப்பட்ட கொள்கைகள் நம்மளவிலே உண்மையாகவே அமைந்துவிடும். என்னை? உண்மை என்று நாம் கொள்வன எல்லாம், எமது உணர்ச்சியில் அங்ஙனம் படுவனவேயா மாதலின். இங்ஙனம் எமக்கு உண்மையாக ஒருகால் அமைந்த யாதொரு கொள்கையை பின்னர் அங்ஙனம் கொள்ளாதொழிவது, அக்கொள்கை உண்மை அன்றும் என்று எமது உள்ளத்திற் பிறிதோர் உணர்ச்சி பிறந்தாலன்றி அமையாது.

இவ்வுணர்ச்சியின்றி நாம் நமது முந்தை உணர்ச்சியை விலக்குவ துண்டாயின், எமது செயல் உண்மையை விரோதிக்குமோர் கபட விலாசமேயாகும். இளமையிற் பெற்றுக்கொண்ட அறிவுகள் அனைத் தும் எமது அறிவாற்றல் விருத்தி பெறுமுன் பெற்றுக்கொள்ளப் பட்டமையால், இப்போது அவ்வறிவை ஒருங்கே உதறிவிட்டுச் சேதன சூனியராய் இருத்தல் வேண்டுமென்பது மானுஷ்ய விருத்திக் குச் சிறிதும் ஏற்புடைத்தாகமாட்டாது. எமது அன்னை எம்மைக் கரு வுயிர்த் தீன்றமையினை நாம் கண்டதல்ல. ஆயினும் அவளே எம்மைப் பயந்தாள் என்னும் உணர்ச்சி எமது உள்ளத்திலே நிலைபெற்று விளங் கும். இவ்வுணர்ச்சி தவறுடைத்தாம் என்று எமது உள்ளத்திற் பிறி தோர் உணர்ச்சி பிறந்தாலன்றி நாம் முந்தை உணர்ச்சி வழி நில்லா தொழிதல் கூடாது. அங்ஙனம் நில்லேம் எனின், எமது நிலை எல்லா ராலும் பழிக்கப்படும்.

இனி யாதோராற்றில் யாதொரு கொள்கையை நாம் யாதொரு காலத்தில் விசுவாசித்திட்டால், அதன்கண் எமக்குப் பின்னர்ச் சந்தே கம் கிளர்தலும் மரபாகாது. சந்தேகமும் விசுவாசமும் ஒன்றற் கொன்று மறுதலையாகிய உணர்ச்சிகளாதலின், இவற்றுள் ஒன்று நிகழுமிடத்து மற்றது யாதானும் ஓர் ஆதாரமின்றிக் கிளர்தல் சிறி துங்கூடாது. இவற்றுள்ளும் விசுவாசம் சந்தேகத்தினும் அதிக வலி யுடைத்தாதலின், விசுவாசம் நிகழுமிடத்துச் சந்தேகம் தலைக்காட்டு தல் ஒரு சற்றும் அமையாது. ஆகவே எம்மிடத்து அமைந்துள விசு வாசத்தை நாம் சந்தேகித்தல் வேண்டுமென்பது எம்மை இயற்கை நெறிக்குமாறு கொண்டொழுகுமாறு கேட்டல்போலாகும். மனிதர் எல்லாம் ஒருவரை ஒருவர் விசுவாசித்து ஒருவர்கொண்ட கொள்கையை

அவ்விசுவாச வாயிலாக மற்றவர்கொண்டு விருத்தி பெறுவது தானே அவர்க்கு வாய்ப்புடைத்தாகியதோர் இயற்கைத் தருமமாக அமைந்து கிடக்க, இத்தருமத்தின் வழி ஒழுகும் ஒழுக்கத்தை மூடபத்தி என்பாரது அறிவின் அகலம் சாலவும் வியக்கற்பாற்ரும்!

இன்னமும் விசுவாசத்துக்கு அறிவு நியதகாரணமல்ல. அறிவாலும் எமக்கு விசுவாசம் உண்டாவது கூடும் எனினும், அறிவு நிகழாவிடத்து விசுவாசம் நிகழமாட்டாதென்று கொள்ளுதல் சிறிதும் கூடாது. அறிவாற் கிளர்ந்த விசுவாசந்தானும், அவ்வறிவு மறதி முதலிய காரணம்பற்றி மறைந்தவிடத்தும் தான் நிலைபெற்றிருத்தலை நாம் நன்ருகக் காண்பதுண்டு. ஆகவே அறிவு தானே விசுவாசத்துக்குக் காரணம் என்பது ஒருசற்றும் பெறப்படமாட்டாது. நாம் இளமையிற் பெற்றுக்கொண்ட விசுவாசமாகிய உணர்வு, எமது தேகமும் எமக்குக்கிடைத்த பிதிரார்ச்சிதமும்போல எமது இயற்கைச் சுதந்தரங்களாக நாம் எல்லாம் பாலிய தசையிலிருந்து யௌவன தசைக்கு உடன்கொண்டு செல்லும் உடைமைப் பொருள்களாம். எமது தேகத்தையாவது எமது பிதிரார்ச்சிதத்தையாவது அது அதனுக்கு ஏதுவாயமைந்திருந்த காரணங்களை நாம் காணுமைபற்றி ஒழித்துவிடாது கைக்கொண் டாளுமாறுபோல, எமது உணர்வையும், அதனுக்கேதுவாகிய காரணங்களையும் நாம் காணுதவழியும், நாம் பற்றியாளுவதே மரபாகும். எமது உணர்ச்சி எமது பிதிரார்ச்சிதங்களினும் எத்தனையோ மடங்கு சிறப்புடையதொன்ருகும்.

இளமையிற் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை ஒருங்கே ஒழித்துவிடுவது மரபாகாதாயினும், நமது முன்ஞேர் அறியாமை காரணமாகக் கொண்ட கொள்கைகளில் நாம் வைத்துள விசுவாசத்தை ஒழித்துவிடுதல் வேண்டும் என்பதும் விஞ்ஞான வாதிகளது அபிப்பிராயங்களுள் ஒன்று. நம் முன்ஞேர் கொண்ட கொள்கை அறியாமை காரணமாகக் கொள்ளப்பட்டதென்பதைச் சாதிப்பதெவ்வாறு? அவர்களது கொள்கைக்குரிய நியாய ஆதாரங்களை நாம் அறியாமைபற்றி அக்கொள்கைக்கு யாதானுமோர் ஆதாரமில்லை யென்று நாம் துணிவது நீதியாகுமா? எம்மால் அறியப்படாதன அனைத்தும் இல்பொருளாமெனத் துணிவது விவேக சம்பிரதாயம் எனப்படுமோ? ஒரு சமுத்திரத்திலே இன்ன இடத்திலே இன்ன கற்பாறை உண்டென்று கர்ன பரம்பரையாக அறிந்தானோர் மாலுமி, அப்பாறையைத் தான் காணுமைபற்றி, அப்பாறை அங்கே உண்டென்பது அறியாமையின் பயனும் என்று ஒதுக்கிவிட்டு, அதன்மீது தன் மரக்கலத்தைச் செலுத்தி

உடைத்துவிடுவது அறிவின் பயன் எனத்தக்கதாமோ? எம்மால் விசுவசிக்கப்பட்டு வரும் கொள்கை ஆதாரமில்லாத ஆபாசம் என்று எமக்கு இனிது புலப்பட்டாலன்றி அதனை ஒழித்துவிடுவது மானுஷ்ய விவேகம் எனப்படமாட்டாது. மனிதர் எல்லாம் எல்லாவற்றையும் காணும் தகுதி உடையர் அல்லர். அவர்களுள் ஒரு சிலர் மாத்திரமே சிற்சில உண்மைகளைக் காணுந் தகுதி படைப்பர். எஞ்சியவர் எல்லாம் அங்ஙனங்கண்ட சிலரது சாட்சியாற் பயன்பெறுவர். இங்ஙனம் ஒருவர்க்கொருவர் துணையாகவே மானுடர் எல்லாம் விருத்தி பெறுவது. இங்ஙனம் இன்றி எவ்வெவரும் தத்தமது க்ாட்சி மாத்திரையானே விருத்தியுறல் வேண்டும் என்னும் நியதி உளதாமாயின், மனிதர் இப்போது அடைந்துள்ள உயர்ந்த நிலையினைப் பெற்றிருக்கமாட்டார்.

நம் முன்னோர் வாயிலாக நாம் பெற்று விசுவசிக்குங் கொள்கைகளுள் தலைமை பெற்றது நமது தெய்வக்கொள்கை. இந்தக்கொள்கை அதிபரமாப்தரான கடவுளாற்றானே எமது மூதாதையர்க்கு அனுக்கிரகிக்கப்பட்டதென்னும் விசுவாசமும் எமது தெய்வ விசுவாசத்தோடு கூட ஒருங்கு நிகழும்போது அந்தக் கொள்கையினை அறியாமை காரணமாகக் கொள்ளப்பட்டதென்று நாம் துணியுமாறு எங்ஙனம்? அதனை அறியாமையின் பயன் என்று எமக்கு ஐயந்திரிபறக் காட்ட வல்ல நியாயவாற்றலைக் காண்பதுண்டாயின் அப்போது, நாம் அதனைச் சந்தேகிக்க ஆரம்பிக்கலாம். இந்த நியாயவாற்றலைக் காண்பது சிறிதுமின்றி, நாம் நமது மூதாதையரினும் அறிவுடையேம் எனச் செருக்குற்று, எம்பால் எமது மூதாதையர் தம்மால் பண்டுதொட்டு அனுசந்தானம் பண்ணப்பட்டு வந்த விசுவாசத்தையும், அவ்விசுவாசத்தின் பயனாக எம்மிடத்தே முறுகி வளர்ந்து முதிர்ச்சியுற்றமைந்துள கடவுட் பத்தியையும் நாம் இப்போது அலட்சியம் செய்யத் தலைப்படுவம் என்றால், இங்ஙனந் தலைப்படுவது அறிவுடைமைக்கிலக்கணமாகமாட்டாது.

இன்னமும், தெய்வ விசுவாசம் எமக்கு எமது மூதாதையர் வாயிலாக ஊட்டப் பெற்றதாயினும், அங்ஙனம் ஊட்டப்பெற்றமை காரணமாக அது எம்மிடத்தே அமைவுற்ற பின்னர், எமக்கு எம் மூதாதையரது காட்சியும் வேண்டப்படுவதில்லை. அக்கொள்கையைக் குறித்த அறிவு எமது உணர்ச்சியிற் சென்று பதியுந்துணையுமே அவரது சாட்சியம் வேண்டப்படும். பதிந்த பின்னர், எமதுணர்ச்சியே அதனுண்மைக்குத் தக்க சான்றாகும். ஒரு பெண் ஒரு ஆடவனை மணந்து அவனைத் தனக்கு நாயகனாகக் கைக்கொண்டு, அவனோடு கூடி

வாழுமிடத்து, அவ்வாழ்க்கையே அவனை அவளுக்கு நாயகனாகக் காட்டி நிற்கும். இதன் பொருட்டு அவனை அவளுக்கு நாயகனாக மணம் புணர்வித்தாரது சாட்சியம் ஒரு சிறிதும் வேண்டப்படாது. இங்ஙனமே தெய்வக் கொள்கை எமது உணர்ச்சியிற் பதிந்து, எம்மால் விசுவசித்துப் பத்தி செய்யப்பட்டு வரும்போது, அது எமக்கு நமது சாட்சி கொண்டே பரமசத்தியமாக அடைந்து கிடக்கும். அந்த நிலையிலே அவ்வுணர்ச்சிக் கேதுவாயிருந்தாரது தகுதியைக் குறித்துச் சிந்திக்க வேண்டுவதில்லை. தன்னெஞ்சறியத் தானறிந்த உண்மைக்குச் சாட்சியந் தேடுவது மிகையாகும். இந்த நிலையிலே நாம் அவ் விசுவாசத்தை அனுசரிப்பதெல்லாம், அது எமது மூதாதையரால் எமக்கூட்டப் பெற்றமையாகிய அந்த ஏதுப்பற்றியல்ல. அது எமதுணர்ச்சியின் கண் உண்மை வடிவாக அமைந்துள அந்த ஏதுப்பற்றியேயாம். ஆகவே நமது மூதாதையர் அறிவிலிகளா யிருந்தமைபற்றி இத்தெய்வக் கொள்கையைக் கைக்கொண் டொழுகுவாராயினர் என்று நாம் துணியுமிடத்தும், அத்துணிபுபற்றி எமது விசுவாசத்தை நாம் தளர்வுற விடுத்தல் மரபாகாது. எமது விசுவாசம் தவறுடைத்தென்று நியாயவாயிலாகப் புலப்பட்டால் மாத்திரமே நாம் அவ்விசுவாசத்தை ஒழிக்கத்தக்கது. லௌகிகங்களிற்றானும், ஒரு பொருள் வந்தவாறு எங்ஙனமாயினும், அப்பொருள் ஆட்சிக் கண்ணதாய் அமைந்து கிடக்குமிடத்து, அவ்வாட்சியே அதனுக்கு உரிமை சாதித்தற்கட் சிறந்த சாதனமாகுமென்று அரசியற் பிரமாணங்களும் விதிக்கும். ஆட்சியமைந்த பின் ஆட்சிப்பொருளின் வருவாயைக் குறித்துச் சிந்திப்பதும் அப்பிரயோசனமாம்.

எமக்கு உணர்ச்சி பிறக்குமா றெங்ஙனமாயினும், அவ்வுணர்ச்சி வழி ஒழுகுவதே நமது கடனன்றி, அவ்வுணர்ச்சியின் காரணங்களை விசாரித்தறிந்தே நாம் அதன் வழி நிற்றல் வேண்டும் என்பது மானுட இயற்கைக்கு மாறானதோர் பிரசங்கமாம். எமக்கு இன்றியமையாது வேண்டப்படும் செயல்களினெல்லாம் நாம் நமது உணர்ச்சி வழித் தானே செல்வது பெரிதுங் காணப்படும். ஒரு மாதாவிடத்து அவளது மகவை நோக்கிக்கிளரும் அன்பு அவள் அறிவிற் புலனாகாது இயற்கை மரபாற்றானே கிளர்ந்து வளரும். இந்த அன்பாகிய உணர்ச்சியின் காரணத்தை அவள் அறிவதில்லை. இக்காரணத்தை அறியாமைபற்றி அவள் அவ்வன்பை ஒழித்துவிடுதல் வேண்டும் என்று எமது விஞ்ஞானவாதிகள் சொல்லமாட்டார். ஒரு மகவினும் பல்லாயிரமடங்கு சிறந்த கடவுளிடத்துள்ள அன்பை ஒழித்துவிடுதல் வேண்டும் என்று

சொல்வது எத்துணைப் பெரும் பேதமையாகும் என்பதை நாம் எடுத்துக்காட்டல் அநாவசியகமாம்.

இன்னமும், கடவுளது உண்மை நிலை எமது அறிவு நிலைக்கு அதீதமாகியதோர் சத்தியம் என்பது எல்லாச் சமயங்கட்கும் ஒப்ப முடிந்ததோர் உண்மையாகும். அந்த நிலையினை நாம் எமது உணர்ச்சி வாயிலாக ஒருவாறு சென்று காண்பதன்றி, எமது சிற்றறிவுகொண்டு காண்பது கூடாது. எமது அனுபவத்தை நாம் உற்று நோக்குமிடத்து, எமது நினைவுக்கு விடயமாகும் எத்தனையோ நிகழ்ச்சிகள் எமது சொல்லுக்கு அடங்காதிருத்தலையும், எமது சொல்லுக்கு விடயமாகும் எத்தனையோ நிகழ்ச்சிகள் எமது செயலுக்கு அடங்காதிருத்தலையும், நாம் பிரத்தியட்சத்திற் கண்டிருக்கின்றோம். இங்ஙனமே எமது உணர்வுக்கு விடயமாவதோர் உண்மையும் எமது அறிவுக்கு விடயமாகாமை நூதனமல்ல. வாக்கு மனாதீதராகிய கடவுளது திருவருள் விலாசம் எமது சிற்றறிவுக்கு எட்டாதென்பதை நாம் நன்றாகச் சிந்தித்து, அவ்விலாசம் பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுளது காருண்ணிய மேலீட்டால் எமது உணர்வின் கண் ஒருவாறு தாக்குவதை நாம் நன்றாக உணர்ந்து, அவ்வுணர்ச்சி வழி ஒழுகவேண்டியதே எமக்கெல்லாம் பெருங்கடனாதலின், அங்ஙனம் ஒழுகும் ஒழுக்கத்தை மூட ஒழுக்கம் என்று நகையாடுவது துல்லிய புத்தியுடையாரை நோக்கி மந்தபுத்தியுடையார் பரிகசிப்பதுபோலும் ஒரு மௌட்டிகமேயாமென்க.

இனி எமது பத்திதான் மூடபத்தியாயினும் ஆக. அப்பத்தி வழி ஒழுகுவதே எமக்கெல்லாம் பெருங் கடனென்பதை நாம் முக்கியமாகக் கவனித்தல் வேண்டும். சிறுவர்கள் விளையாட்டின் கண் விருப்புடையராதல் அவர்களது அறிவின் குறைவாற்றானே யாயினும், அவர்கள் அவ்விளையாட்டயர்ந்தே விறுத்தியுருதல் வேண்டும். அவ்விளையாட்டை ஒழித்துவிட்டால் அவர்கள் விருத்தி பெறுதல் கூடாது. ஞானிகளானோர் லௌகிகரை நோக்கி "இறந்தார் பொருட்டுக் கவலையுறுதல் உங்கள் அறியாமையாம்" என்று நகையாடுவாராயினும், லௌகிகரிடத்தே உலகப்பற்று நிகழுந்தனையும், அப்பற்றுக் காரணமாக எழும் உணர்ச்சி வழிநின்று, அவர்கள் இறந்தார் பொருட்டுக் கவலாதொழிதல் கூடாது. அங்ஙனம் கவலாராயின் அவர்கள் வன்கண்ணரென்றாவது, கபடிகள் என்றாவது பழிக்கப்படுவர். அதுபோல, எமது நிலைக்கமைய எம்பால் எழும் தெய்வ உணர்ச்சியிற் றிறம்பாதொழுகல் எமக்கெல்லாம் பெருங்கடனென்பது காண்க.

யாழ்ப்பாணம் S. சபாரத்தின முதலியார்.

# விசுவாசம்

இந்த நிலவுலகத்தின்கணுள்ள சீவதோற்றங்கள் அனைத்தினும் சிறந்தது மானுடத்தோற்றம். மானுடத்தோற்றம் எடுத்தார்க்கெல்லாம் மிக முக்கியமாயுள்ளது சமயம். இந்தச் சமயத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாயுள்ளது விசுவாசம். இந்த விசுவாசம் சமய ஞானங்களின் மாத்திரமல்ல, லௌகிக விஷயங்களிற்றானும் எமக்கு அத்தியாவசியமாக வேண்டப்படுவதொன்று. ஆனால் இந்த விசுவாசம் சமயத்துறைகளில் நிகழுமிடத்து, இதனை இக்காலத்திலுள்ள அறிவுப் பிரியர் சிலர் நகையாடத் தொடங்கிக் கொண்டார்கள். இதுவும் கலிகால வலி என்றே சொல்லத்தக்கது. மக்கட்பிறவி எடுத்தார் அனைவர்க்கும் விசுவாசம் என்பது இன்றியமையாச் சிறப்பிற்றாயதோர் அணிகலம். ஆதலின் அதனைக் குறித்து ஆராய்ச்சி செய்வது பெரும் பிரயோசனமாமெனக் கருதினேம்.

## விசுவாசம் இன்னதென்பது

விசுவாசமாவது உண்மை எனக் கொண்டதொரு கொள்கையில் உறைப்புற்று நிகழும் உள்ளத் துணர்ச்சி. இந்த உணர்ச்சி ஆன்ம சிற்சத்தியின் ஓர் இயற்கைக் குணம். இது நமது சுயேச்சையால் அமையுந் தகுதியுடைத்தல்ல. நமக்கு விசுவாசம் பிறத்தற்கமைந்த ஏதுக்கள் இல்லாவிடத்து, நாம் எங்ஙனம் முயன்றாலும், விசுவாசம் பிறக்குமாறில்லை. அது பிறத்தற்கமைந்த ஏதுக்கள் நிகழுமிடத்து, எமது முயற்சியின்றித் தானே பிறக்கும். நமது சைதன்னிய ஆற்றலின்கண் யாதொரு உண்மை புலப்படுமிடத்து, அப்புலப்பாடு காரணமாக, அவ்வுண்மையைக் குறித்து நமது மனத்திலே ஓர் உணர்ச்சி தோன்றும். இவ்வுணர்ச்சியே விசுவாசம் எனப்படுவது. எமது சைதன்னிய சொரூபமே இவ்வுணர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

அறிவதும் உணர்வதும் ஆகிய இரண்டும் எமது சிற்சத்தியின் தொழில்களேயாயினும், இவை இரண்டற்கும் பெரிதும் பேதமுண்டு. உணர்தற்றொழில் (அறிவுபற்றி நிகழுமிடத்து), அறிதற் றொழிலுக்குப் பின்னர் நிகழ்வது. அறிதற்றொழில் எமது சைதன்னிய ஆற்றலின் புறத்தொழிலும், உணர்தற்றொழில் அதன் அகத்தொழிலுமாமென்று கொள்ளத்தக்கன. அறிதற்படி ஒன்றும், உணர்தற்படி பிறிதொன்றுமா மென்று கொள்ளினும் இழுக்காது.

## விசுவாசந் தோன்று முறை

விசுவாசந் தோன்றுமுறையினை நாம் ஆராயுமிடத்து, அது இயற்கைமுறையும் விளக்க முறையுமென இருகூற்றதாம் என்று கொள்ளத் தக்கது. இயற்கைமுறையாவது எமது அறிவின் சகாயம் பெரிதுமின்றி, இயற்கைச் சார்புகள் காரணமாக எம்மிடத்துண்டாகும் உணர்ச்சி. இந்த உணர்ச்சியை நாம் ஆராயுமிடத்து, இதனுக்கேதுவாகிய கருவி மானுடதோற்றத்தின் மாத்திரமல்ல, சீவதோற்றங்கள் அனைத்தினும், அவ்வத் தோற்றங்களின் இயற்கை மரபளவாக அமைந்திருக்கக் காணலாம். தாவரங்களின்கணுள்ள பரிசஉணர்ச்சியும், மிருகங்களின் கணுள்ள இயக்க உணர்ச்சியும் போல்வன இக்கருவி காரணமாகவே பிறக்கும். மனிதனிடத்திலும், அறிவாற்றலைச் சாதிக்கும் பக்குவம் வந்தெய்துமளவும், இந்தக் கருவிகாரணமாகப்பிறந்த இயற்கை உணர்ச்சி மாத்திரமே உள்ளது. அறிவாற்றல் சாதிக்கும் பக்குவம் எய்தியபின், அச்சாதனை காரணமாக இவன்பாற் பிறக்கும் உணர்ச்சியே விளக்க உணர்ச்சி என்று கொள்ளப்படுவது. இந்த விளக்க உணர்ச்சிக்கு முக்கிய காரணமாய் உள்ளது இவனது அறிவுவிளக்கமாம். இந்த விளக்கமும் பிரத்தியட்சக் காட்சி சாட்சியக் காட்சி என்று இருதிறப்படும். இவற்றுள், பிரத்தியட்சக் காட்சியாவது தானுக ஒன்றனை நேரே காண்பது. சாட்சியக் காட்சியாவது தான் காணுத தொன்றைச் சாட்சியவாயிலாகக் கேட்டறிவது. இவ்விரு திறக்காட்சிகளும் மாந்தர்க்கு அறிவு பிறக்கும் வாயில்களாம். இந்த விஷயத்தை நாம் நுணுகி ஆராய்வதுண்டெனின், உலகத்திலே மனிதர் எல்லாம் அறிவு பெறுவது அனேகானேகமாகச் சாட்சியக் காட்சி வாயிலாற்ருனே என்பது நன்கு போதரும். நாம் எமது பாலப் பருவத்திலே எமது பெற்ருர் முதலிய சாட்சியங்கள் வாயிலாகவும், அதன் பின்னர் ஆசிரியர் முதலிய சாட்சியங்கள் வாயிலாகவும், அதன் பின்னர் அயலார், உறவினர், நட்பாளர், அறிஞர் என்றின்னோரது சாட்சியங்கள் வாயிலாகவும் நாம் அறிவின் விருத்தியுறப் பெறுகின்ருேம். மனுஷன் கிஞ்சிஞ்ஞன் ஆதலின் அவன் எல்லாக் காட்சிகளையும் பிரத்தியட்சமாகக் கண்டறிதல் கூடாது. சாட்சியக்காட்சி இவனது அறிவு விருத்திக்குப் பெருங் காரணமாகும். சாட்சியக் காட்சிகளைத் தள்ளிவிடுவ துண்டென்ருல், நாம் மிருகவர்க்கங்களோடு வைத்தெண்ணப்படுவதே முடிபாகும். அன்றியும் பிரத்தியட்சக் காட்சி வாயிலாக அறிதல் கூடாத உண்மைகள் அநந்தம் உண்டு. பூர்வ இதி

காசங்களைக் கற்பதெல்லாம் சாட்சியக்காட்சி கொண்டேயாகும். நாம் எல்லாம் பிறத்தற்கு வெகுகாலத்துக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை இப்போது நாம் பிரத்தியட்சமாகக் காணுதல் சிறிதும் கூடாது. ஆகவே சாட்சியக் காட்சியை நாம் தள்ளிவிட்டால், இதிகாசங்களைக் கற்றல் ஒருங்கே கூடாதாகும். இதிகாசங்கள் மாத்திரமல்ல, பொதுப் பட வித்தைகள் அனைத்தும் ஆசிரியனை நம்பி, அவனது சாட்சியங் கொண்டே கற்கப்படுவனவாம். இங்ஙனங் கற்குமுறை தானே எமது அறிவு விருத்திக்குச் சிறந்த சாதனமாயுமுள்ளது. இந்தச் சாட்சியக் காட்சியை நாம் சீர்தூக்குவதுண்டாயின், இது எமக்குப் பிரத்தியட்சக் காட்சியினும் சிறப்புடைத்தென்பது தெற்றெனப் புலப்படும். பிரத்தியட்சக்காட்சி எமது அல்ப அனுபவத்தின் மாத்திரமே தங்கிநிற்பது. சாட்சியக் காட்சியோ எனின், எம்மினும் பன்மடங்கு சிறந்த ஆப்தரது அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இங்ஙனஞ் சிறந்த சாட்சியக் காட்சி காரணமாக நம்மிடத்தே கிளரும் விசுவாசமாகிய உணர்ச்சி எமக்குப் பெரிதும் சிறைப்புடைத்தாம் என்பதையும், அவ்வுணர்ச்சி எமக்கு இயற்கை மரபாகக் கிளர்தலின், அதனை நாம் கொள்ளாதொழிதல் கூடாதென்பதையும், இங்ஙனம் எமக்குச் சாலச் சிறப்புடையதும், இயற்கை வழிவந் தமைவதுமாகிய விசுவாசத்தின் வழி நாம் ஒழுகுதல்பற்றி எம்மேற் குற்றம் பாரித்தல் பெருங்குற்றமா மென்பதையும் இக்காலத்தே அறிவான் மயங்கி அழியும் விஞ்ஞான வாதிகள் கவனித்தாற் பெரிதும் நன்மையுண்டாம்.

இனி இந்தப் பிரத்தியட்சக் காட்சி சாட்சியக் காட்சிகளைக் கண்ட அளவிலே நம்மிடத்தே விசுவாசமாகிய உணர்ச்சி தானுகத் தோன்று மாறுபோலவே, நம்மைச் சார்ந்துள இயற்கைச் சார்புகள் காரணமாக, நமது அறிவு விளக்கம் இன்றியும், நம்மிடத்தே ஓர் ஓர் உணர்ச்சி தோன்றுவதும் உண்டு. இது எம்மிடத்தமைந்து, எம்மை எல்லாம் தனது ஆஞ்ஞைவழி நடாத்தும் எமது இயற்கைத் தருமத்தின் வழித்தாகும். இந்தத்தருமத்தைக் கடத்தல் எவராலும் ஏலாது. அதுமட்டோ! இவ்வியற்கைத் தருமத்தின் வழி ஒழுகுதல் தானே எமது விருத்திக்குப் பெரிதும் அனுகூலமுடையதோர் மரபாகும். நாம் இயற்கைக்கு மாறுகொண்டு ஒழுகுவதுண்டென்றால் நாம் விருத்தியுறுதல் சிறிதும் கூடாதென்பதைச் சொல்லிக் காட்ட வேண்டியதில்லை. ஆகவே இயற்கை வழிப்பிறக்கும் உணர்வாகிய விசுவாசத்தையும் நாம் பெரிதும் போற்றுதல் வேண்டுமென்பது நன்ருக நாட்டப்படும். உண்மை பேசுதல் வேண்டும் என்னும் விசுவாசம், எம்

மிடத்தே, எமது பாலப்பருவத்தே, எம்மைச் சார்ந்துள இயற்கைச் சார்புகள் காரணமாகப் பிறக்கும். இந்த விசுவாசமாகிய உணர்ச்சி எமது அறிவு விளக்கம் காரணமாக—அதாவது, உண்மை பேசுவதால் எய்தற்பாலதாகிய நன்மை இது என்று அறிந்து, அவ்வறிவு காரணமாக—நம்மிடத்துப் பிறப்பதல்ல. அங்ஙனமாயினும், அவ்வுணர்ச்சி வழி ஒழுகுவதே எமது கடனும், எமது விருத்திக்குரிய உபாயமுமாகும். இவ்வுணர்ச்சியைக் குறித்து நாம் சற்றே நுணுகி ஆலோசிப்பதுண்டெனில், இதுவே நாம் இவ்வுலகத்திலே இயங்கும் இயக்கத்துக்கெல்லாம் முக்கியமான கருவியென்பது நன்ருக நாட்டப்படும். நாம் எல்லாம் எங்கள் எங்கள் பாஷைகளைப் பயிலுமுறை அனைத்தும் இந்த இயற்கை உணர்ச்சி வாயிலாகவேயாம். பாஷைப் பயிற்சி மாத்திரமல்ல, எமது பழக்கங்கள் ஒழுக்கங்கள் முதலிய அனைத்தும் இவ்வுணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டே நம்பால் அமைவன. இங்ஙனஞ் சிறந்த இயற்கை உணர்ச்சியினது இன்றியமையாச் சிறப்பையும், அதன் வழி நாம் ஒழுகாதொழிதல் கூடாமையையும் ஒரு சிறிதும் சிந்தியாது, அவ்வுணர்ச்சி வழி நிற்பாரை எல்லாம் பழித்துரைக்கும் தற்கால விஞ்ஞான வாதிகளது அறிவின் விசாலத்தை நாம் யாதுக் கொப்பிடுவோம்.

கண்டதையன்றிக் காணுததொன்றையும் உண்மையென்று நம்புதல் மரபாகாதென்பது, இக்காலத்துள்ள நவீன கல்வியின் பயனுய்க் கொண்டது. நாம் பிரத்தியக்ஷமாகக் கண்ட காட்சிகள் தாமும் பிழைபடுதலே நமது விஞ்ஞான அபிமானிகள் அறிகிலர் போலும்! இவைகள் பிழைபடுதலும் கூடுமென்பது பற்றி இக்காட்சிகளை நாம் தள்ளாது கொள்ளுதல் போலவே, நமது அறிவுக்கு வருவாய்களாக இயற்கை மரபால் அமைந்துள்ள ஏனைத் துறைகளாற் பெறப்படும் காட்சிகளையும் நாம் கைக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். இங்ஙனமின்றேல், நாம் அறிவு பெறுவதும், இந்தப் பிரபஞ்சத்திலே சீவிப்பது தானும் ஒரு சிறிதும் கூடாவாம். மனிதர் எல்லாம் அபூரணர் ஆதலின் அவர்களது காட்சி பிழைபடுதலுங் கூடும். இதுகொண்டு நமக்குப் புலப்படுங் காட்சிகள் அனைத்தையும் தூரம் போக்கிவிட்டு நாம் மௌட்டிக சிரேட்டராய் வாழ்வதோ மானுஷ்ய தருமம்! மனித வர்க்கம் அனைத்திலும் சாதாரணமாக அமைந்துள இயற்கைத் தருமத்தை அனுசரித்தாலன்றி, எமக்கு விருத்திக்கிரமம் வாய்ப்பது சிறிதும் கூடாதென்பதையும், இந்த இயற்கைத் தருமத்தின் வழி நம்பால் அமையும் விசுவாசத்தை நாம் அலட்சியஞ் செய்வதுண்டென்ருல், நாம்

எல்லாம் நமக்கே துரோகஞ் செய்வதாய் முடியுமென்பதையும் நமது விஞ்ஞானுபிமானிகள் எல்லாம் சிந்தித்தல் பெரும் பிரயோசனமுடைத்தாகும்.

## விசுவாசத்தின் பிரயோசனம்

உண்மை உணர்வு தலைப்பட வேண்டியது மக்கட்கெல்லாம் இன்றியமையாது வேண்டப்படும். உண்மையை அறிதன் மாத்திரையால் பயன் பெறுவது கூடாது. அதனிடத்தே விசுவாசமாகிய உணர்வு பிறந்தாற்றானே அவ்வறிவால் நாம் பயன் பெறுவதாகும். உணர்ச்சியே எமக்கு அனுபவத்தைப் பயப்பது. அறிவு எமது நினைவுமாத்திரையில் நின்றுவிடுமன்றி, யாதொரு உண்மையின் விசிட்டத்தை எமக்கு அனுபவத்திற் காட்டாது. பொய் பேசுதல் குற்றமென்று அறிந்த மாத்திரையால் எமக்கு அவ்வறிவால் எய்துதற்குரிய பயன் சித்திக்கமாட்டாது. பொய் பேசுதல் குற்றமென்று உணர்ந்தாற்றானே எமக்கு அப்பயன் சித்திக்கத்தக்கது. நாம் எமது சிற்சத்தி ஆற்றலின் இயற்கை நெறியினைக் குறித்துச் சிறிது ஊன்றிச் சிந்திப்பதுண்டெனின், உணர்ச்சியே எமது இயக்கம் அனைத்தினுக்கும் காரணம் என்பது செவ்விதிற் போதரும். அறிவு விளக்கம் இல்லாத மிருக தாவரங்கள் தாமும், இந்த உணர்ச்சியாற்றானே இயங்குகின்றன. மனிதன் தானும், அறிவின் விருத்தியுறுங்காறும் உணர்ச்சி ஒன்று கொண்டே இயங்குவன். அறிவின் விருத்தி அடைந்த பின்னரும், அவன் பெறும் அறிவு அவனது உணர்ச்சியிற் சென்று உறைத்தாற்றானே நாம் அவனைப் பிடித்தற்கு முயல்கின்றேம். ஆகவே உணர்வே எமக்கு அறிவினுஞ் சிறந்ததாகும். அறிவு உணர்வின்றிப் பயன்படமாட்டாது; உணர்வு அறிவின்றியும் பயன்படும். அறிவினது சகாயம் சிறிதும் இல்லாமலும், உணர்ச்சி மாத்திரத்தானே எமக்கு வேண்டிய அநேக தொழில்களை நாம் பலமுறையும் செய்வதுண்டு. நாம் எமது கண்களை இமைப்பதெல்லாம் அறிவு கொண்டல்ல. உணர்வு மாத்திரையானேயாம். எமது அறிவு நிகழாமைபற்றிக் கண்களை இமைத்தல் குற்றமென்று யாரும் சொல்லமாட்டார். இவ்வுணர்ச்சியின் மாட்சியை நாம் உள்ளவாறு எடுத்துச் சொல்லப்புகின், இது எம்முள் மறைந்து நின்று எம்மை இயக்கும் ஓர் அற்புத யந்திரம் என்பது நன்கு துணியப்படும்.

இவ்வுணர்ச்சிக்குக் காரணமாகிய எமது இயற்கை விவேகம் (Instinct) எனப்படும் புத்தி தத்துவமானது எமது சிற்சத்தியாற்

றலுக் குரியதோர் கருவியாகும். இந்த இயற்கைக் கருவி, எம்முள் மறைந்து நின்று, எமது அறிவின் வியஞ்சகம் இன்றியும் எம்மை இயக்குவது. இந்தக் கருவியின் கண்ணே நாம் ஈட்டும் அறிவு சென்று உறைக்குமிடத்து, அவ்வுறைப் பளவாக இக்கருவியும் விருத்தியுறும். இக்கருவியை நாம் சமய ஞானங்கொண்டு ஆராய்வதுண்டெனின், இதன் கண்ணே சிவசத்தியின் அதிட்டானம் விசேஷமாக அமைந்திருத்தலைச் செவ்விதிற் காணலாம். கடவுள் எம்மை உணர்வுக் குணர்வாய் நின்று இயக்குவர் என்று சமய சாத்திரங்கள் சாதிப்பதும் இக் கருத்துப் பற்றியேயாம். எம்மைத் தொழின்முறைகள் அனைத்தினும் இயக்குவர் கடவுளேயாயினும், அவர் அங்ஙனம் இயக்குவ தெல்லாம் இவ்வுணர்ச்சி வாயிலாற்றானே யாகலின், இவ்வுணர்ச்சி சிவச் செயலுக்கு மிக அணிமையிலுள்ளதோர் படி எனக் கொள்ளத்தக்கது. கடவுள் ஆன்மாக்களை எல்லாம் அவரவர் தகுதிப்படி உணர்ச்சியைக் கிளர்த்தி, அவ்வுணர்ச்சி வாயிலாக அவர்களை இயக்குவாராதலின் இவ் வுணர்ச்சி எமக்கு எத்துணைச் சிறப்புடைய தென்பதும், இதன் வழி நாம் ஒழுகாதொழிவது கூடாதென்பதும் இனிது போதரும். அல்லாமலும், இவ்வுணர்வாற்றல் இல்லாவழி எமக்கு அறிவுதானும் பயன் படுவது சிறிதும் கூடாதாதலின், இங்ஙனம் சிறப்புடைய உணர்வை நாம் அலட்சியம் செய்து அறிவை மாத்திரம் பொருட்படுத்துவது, எமது அறிவின் சிறுமையைக் காட்டி நிற்கும் என்க.

இனி இவ்வறிவின் மேற்கொண்ட பேரபிமானங் காரணமாக, அறிவின்றி நிகழும் உணர்வே விசுவாசம் என்று சிலர் வாதிப்பர். இது பெருந் தவறுடைத்தாம். என்னை? அறிவோடு கூடிய காட்சியிற்றானே எமக்கு விசுவாசம் பெரிது முண்டாதலின். ஆனால் அறிவின் வியஞ்சகம் இல்லாமலும் எம்மிடத்தே உணர்வு பிறத்தலும் உண்டு. இவ்வுணர்வு தானும் எம்மாற் பெரிதும் போற்றப்படத் தக்கதேயாம். அறிவோடு கூடிய காட்சியில் எமக்கு இயற்கை முறையாக விசுவாச முண்டாதல் போலவே, உணர்வோடு கூடிய காட்சியினும் உண்டாவது. ஆனபின், அறிவோடு கூடிய வழி எழுந்த விசுவாசத்தைப் புறங்காண்பது எங்ஙனம் மரபாகுமோ? விசுவாசத்தின் விசேடத்தை, அது அறிவோடு கூடிய வழி நாம் இனிது காணத்தக்கதாக இருக்க, அறிவு வியஞ்சகப்படாமைபற்றி அவ்விசுவாசத்தை நாம் அலட்சியஞ் செய்தல் விவேக தருமமாகுமோ? விசுவாசம் எங் ஙனம் தோன்றுமாயினும் அது எம்மால் ஆக்கப்படுவதல்ல, அது தோன்றுதற்கியைந்த தகுதி காணப்படுமிடத்துத் தானே தோன்று

வது, இது மானுட இயற்கைத் தருமம், இவ்வியற்கைத் தருமத்தை நாம் விலக்குதல் கூடுமோ? கூடுமெனின் இத்தருமத்தின் விலகி நாம் இயங்குமாறெங்ஙனம்? நாம் விருத்தி பெறுவதெவ்வாறு? மனிதர் எல்லாம் சிற்றறிவுடையராதலின், அவர்கள் எல்லாத் துறைகளையும் ஒருங்களந்து தமது அறிவிடைக் காண்டல் கூடாது. கூடாதாயினும், அவரிடத்தே அவரது வாழ்வுக்கு முக்கிய சாதனமாக அமைந்துள்ள உணர்வின் வழி ஒழுகுதலே அவர்க்கெல்லாம் இன்றியமையாப் பெருங் கடனாகும்.

இனி எமக்கு உண்மையாவது தான் யாது? எமது உணர்ச்சியில் உண்மையாகப் புலப்படும் ஒரு பொருளே எம்மால் உண்மை என்று கொள்ளப்படுவது. எமது உணர்ச்சி தவறுடைத்தாயினும் ஆகலாம். எமதுணர்ச்சி வழி நிற்றலே எமக்கெல்லாம் கடனாதலின், எமதுணர்வுக் காட்சிக்குச் சத்தியமாகத் தோன்றும் தோற்றத்தின் வழி ஒழுக வேண்டுவதே நாம் செய்யத்தக்கது. ஒரு தோற்றம் எமது சோத்திரேந்திரியக் காட்சிக்கு விடயமாதன் மாத்திரையால், அது எமக்கு உண்மையாகமாட்டாது. அத்தோற்றம் எமது உணர்ச்சியிற் சென்று உறைத்தாலே நாம் அதனை உண்மை என்று கொள்வது. கானற்சலம் எமது சோத்திரேந்திரியத்துக்கு விடயமாயினும், அது உணர்ச்சியிற் சென்று உறையாமையினல், அதனை நாம் உண்மை என்று கொள்வதில்லை. ஆகவே உணர்வுதானே எமக்கு அறிவினும் மிகச் சிறந்ததோர் சாதனம் என்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளத் தக்கது.

அறிவு நமக்கெல்லாம் பெரிதும் சிறம்புடையதென்பதை நாம் சிறிதும் மறுப்பதில்லை. அறிவோடு கூடாத உணர்வினும், அறிவோடு கூடிய உணர்வு சாலச் சிறப்புடைத்தேயாகும். இதுகொண்டு அறிவோடு கூடாத உணர்வை நாம் புறக்கணித்து விடுவது கூடாது. அறிவு எமக்கு எப்போதும் வாய்க்கமாட்டாது. நாம் எல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையேமாதலின், சர்வ ஞானமுடையராய் எல்லாக் காட்சிகளையும் ஒருங்கே காணுதல் ஒருபோதுங் கூடாது. அக்காட்சிகளும், அறிவு சென்று தீண்டுதற்கரிய கடவுள் விஷயத்திலென்றுல் எமக்கு எவ்வளவுக்கு சமீபித்திருக்கத் தக்கதென என்பதை நாம் நமது சிந்தையிலே நன்ருக அழுத்துதல் வேண்டும். அறிவு நிகழுமிடத்தும், அது நிகழாவிடத்தும், நாம் நமது உணர்வுகொண்டே ஒழுகுவது. இந்த உணர்வை நீக்கிவிட்டால், நாம் எவ்வளவு அறிவுடையராயினும் அவ்வறிவால் எமக்குச் சிறிதும் பிரயோசனமில்லை. இந்த உணர்வு எம்மிடத்துள்ளதோர் இயற்கை மரபாக அமைந்து

எம்மை எல்லாம் இந்தப் பிரபஞ்சத்திலே வழிகாட்டி நடத்துதலின், நாம் அவ்வுணர்வின் வழிச் சென்றாலன்றி நாம் இங்குச் சீவித்தல் தானும் கூடாது.

இங்ஙனம் சிறந்த உணர்வுகட்கெல்லாம் தாயகமாகிய விசுவாசத்தைப் பழித்துரைத்து நமது விஞ்ஞான வாதிகள் தொடுத்துநிற்கும் விதண்டை உலகுக்கெல்லாம் பெருங் கேடாகுமென்பதை விவேகிகளானோர் ஒரு சிறிதும் மறக்கலாகாது.

உலகத்திலே பொருள்கள் எல்லாம் சமத்துவ முடையனவல்ல. அவைகள் ஒன்றினொன்று ஏற்றமுந் தாழ்வுமுற்றிருப்பது சகசம், இதுபற்றித் தாழ்வுடையன வனைத்தையும் தள்ளிவிட்டு ஒழுகினால் நாம் உலகத்திலே வாழ்வது கூடாது. அறிவோடு கூடிய உணர்வு, அறிவோடு கூடாத உணர்வினும் ஏற்றமுடையதாதல் பற்றி, அறிவோடு கூடாத உணர்வை நாம் கைக்கொள்ளுதல் மரபாகாதென்று உலகியலை உள்ளவாறு அறிந்தார் ஒருவரும் சொல்லத் துணியார். பாலோடு கூடிய அன்னம் பாலோடு கூடாத அன்னத்திலும் ஏற்றமுடைத்தாதல்பற்றிப் பாலோடு கூடாத அன்னத்தை உண்ணுதல் கூடாதென்று நமது விஞ்ஞானவாதிகள் தாமும் சொல்லமாட்டார். குருடனுக்குக் காட்சி அறிவு நிகழாதாயினும், அவன் இன்னபொருள் இன்ன இடத்துண்டென்னும் உணர்வுபற்றி அவ்விடத்தை நோக்கிச் செல்வன். இவனிடத்தே காட்சி அறிவு நிகழாமைபற்றி அவன் அங்ஙனம் செல்வது மரபாகாதென்று மந்தமதியினரும் சொல்லமாட்டார். எமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள உணர்ச்சி வழிச்செல்லுமாற்றை இழித்துரைப்பது விஞ்ஞானம் எனப்படுமாயின், அந்த விஞ்ஞானத்தை அஞ்ஞானம் என்று பெயர்கொண்டழைப்பதே தக்கதாகும்.

(இன்னும் வரும்)

யாழ்ப்பாணம் S. சபாரத்தின முதலியார்.

இது "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையினின்றும் எடுத்து இயன்றவரை பிழைகளைத்திருத்தி இங்கு அச்சிடப்பட்டது. (ப-ர்)

---